07th OCTOBER 2024

www.uthayam.lk

# உதயம்

சமூகங்களின் இருளகற்றும் தனித்துவக் குரல்

உதயம்: 01 | இதழ்: 52 | பக்கங்கள் - 13 | editor.uthayam@gmail.com

# இளைஞர்கள் பெண்களுக்கு அதிக வாய்ப்பு வழங்கவும்

## ஊழல்,மோசடியாளர்களை ஒதுக்குங்கள்!

## மார்ச் 12 இயக்கம் கட்சிகளிடம் வேண்டுகோள்!!

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் வேட்பாளர்களைத் தேர்ந்தேடுப்பதற்காக தீவிர முயற்சிகளில் ஈடுபட்டு வரும் அரசியல் கட்சிகளுக்கு மார்ச 12 இயக்கம் விஷேட வேண்டுகோளொன்றை விடுத்துள்ளது.

இத் தேர்தலில் இளைஞர்கள் பெண்களுக்கு அதிக ஒதுக்கீடுகளை வழங்கும்படியும் சிறந்த கல்வியறிவும் மக்களுக்கு சிறந்த சேவைகளை பெற்றுக் கொடுக்கும் திறமையானவர்களுக்கு வாய்ப்பு வழங்குமாறும் இந்த இயக்கம் கேட்டுள்ளது.

ஊழல் மோசடியாளர்களுக்கும் மக்களின் வெறுப்பை சம்பாதித்தவர்களுக்கும் போட்டியிட சந்தர்ப்பம் வழங்க வேண்டாம் என்றும் மார்ச் 12 இயக்கம் மேலும் கேட்டுக் கொண்டுள்ளது.

# ஐ.ம.சக்தி வேட்பாளர்கள் பற்றி ஆராய விஷேட குழு நியமனம்

2024 பொதுத் தேர்தலுக்கு ஐக்கிய மக்கள் கூட்டணி சார்பாக வேட்புமனுத் தாக்கல் செய்ய முன்வந்துள்ள நபர்களுக்கு பல்வேறு தரப்பினரால்

06ம் பக்கம்பார்க்க...

# தாமரை கோபுரத்திலிருந்து விழுந்த சிறுமி

## விசாரணைகள் துரிதம்

தாமரைக் கோபுரத்தைப் பார்வையிட வந்திருந்த சர்வதேச பாடசாலை மாணவி தவறி வீழ்ந்து மரணித்துள்ளார்.

இன்று பிற்பகல் தாமரைக் கோபுரத்தைப் பார்வையிட வந்திருந்த போதே 29 வது

02ம் பக்கம்பார்க்க...

# முனீர் முலப்பர் கம்பஹாவில் போட்டி



தேசிய மக்கள் சக்தியின் நிறைவேற்றுக் குழு உறுப்பினரும் ஜனாதிபதி அனுர குமார திஸாநாயக்கவின் வெற்றிக்காக நாடு முழுவதும் சூறாவளி பிரசாரத்தில் ஈடுபட்ட அஷ்ஷெய்க் முனீர் முலப்பர் எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் கம்பஹா மாவட்டத்தில் போட்டியிடுவதற்காக வேட்பாளர் பட்டியலில் கைச்சாத்திட்டுள்ளார்.

கம்பஹா மாவட்டத்தில் தேசிய மக்கள் சக்தியின் 21 பேர் கொண்ட வேட்பாளர் பட்டியலில் கைச்சாத்திடும் நிகழ்வு இன்று இடம்பெற்றது.

# பொருளாதார அபிவிருத்திக்கு தொடர்ந்தும் உதவி

## ஆசிய அபிவிருத்தி வங்கி பிரதிநிதிகள் ஜனாதிபதியிடம் உறுதி



இலங்கையின் சுற்றுலா,வலுசக்தி மற்றும் சிறு தொழில்துறைகளின் அபிவிருத்திக்கு நிதி உதவி வழங்குவதாக ஆசிய அபிவிருத்தி வங்கி உறுதியளித்துள்ளது.

ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க, ஆசிய அபிவிருத்தி வங்கியின்

02ம் பக்கம்பார்க்க...

# செயல் வீரர் பௌஸி அரசியலிலிருந்து ஓய்வு!




மூத்த அரசியல் வாதியும் முன்னாள் அமைச்சருமான ஏ.எச்.எம். பௌஸி அரசியலிலிருந்து முழுமையாக ஓய்வு பெறத் தீர்மானித்துள்ளார்.

எதிர்வரும் பொதுத்தேர்தலில் தான் போட்டியிடுவதில்லையென்றும் அரசியலில்

02ம் பக்கம்பார்க்க...

# பொதுத் தேர்தலில் களமிறங்கும் யானை



எதிர்வரும் பொதுத் தேர்தலில் நுவரெலியா மற்றும் வன்னி மாவட்டங்களில் யானை சின்னத்தில் போட்டியிடுவதற்கு ஐக்கிய தேசியக் கட்சித் தலைமையிலான கூட்டணி தீர்மானித்துள்ளதாக ஐக்கிய தேசியக் கட்சியின் தவிசாளர் வஜிர அபேவர்தன தெரிவித்துள்ளார்.

02ம் பக்கம்பார்க்க...

# ரணிலின் பாதுகாப்பு தொடரும்; 163 படையினர் பணியில்

## பொலிஸ் ஊடக பேச்சாளர்



முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவிற்கு நியமிக்கப்பட்டிருந்த பாதுகாப்புப் பணியாளர்கள் நீக்கப்பட்டதாக வெளியான தகவலை மறுத்துள்ள பொலிஸார்,

அவரின் பாதுகாப்பிற்காக 163 அதிகாரிகள் நியமிக்கப்பட்டுள்ளதாகத் தெளிவுபடுத்தியுள்ளனர்.

முன்னாள் ஜனாதிபதியின்

02ம் பக்கம்பார்க்க...

# ஹோட்டலில் அடாவடி பொலிஸ் அதிகாரிக்கு இடமாற்றம்

நுவரெலிய நகரில் இரவு பகலாக இயங்கி வரும் ஹோட்டல் ஒன்றின் உரிமையாளரை தாக்கிய போலீஸ்

02ம் பக்கம்பார்க்க...




## பொருளாதார...

**(முதலாம் பக்கத் தொடர்ச்சி)**

இலங்கைக்கான வதிவிட பிரதிநிதி டகபூமி கடோனோவை (Takafumi Kadono) இன்று (07) முற்பகல் ஜனாதிபதி அலுவலகத்தில் சந்தித்து கலந்துரையாடினார்.

இலங்கையின் பொருளாதார அபிவிருத்திக்காக ஆசிய அபிவிருத்தி வங்கியினால் இதுவரையில் முன்னெடுக்கபட்டுவரும் அனைத்து ஒப்பந்தங்களும் அவ்வண்ணமே முன்னெடுத்துச் செல்லப்படும் என்றும், ஆசிய அபிவிருத்தி வங்கியின் இலங்கைக்கான வதிவிட பிரதிநிதி டகபூமி கடோனோ (Takafumi Kadono) தெரிவித்தார்.

இலங்கையின் பொருளாதார முன்னேற்றத்துக்காக சுற்றுலாத்துறை மேம்பாட்டுக்கு அவசியமான வசதிகளுக்கான நிதி உதவிகளை வழங்கவும் ஆசிய அபிவிருத்தி வங்கி தீர்மானித்துள்ளது.

அதன்படி சுற்றுலாத்துறையின் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்கான நிதி உதவிகளை வழங்க ஆசிய அபிவிருத்தி வங்கி தீர்மானித்துள்ளது.

ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவின் வேண்டுகோளுக்கு இணங்க வடக்கில் சுற்றுலாத்துறை அபிவிருத்தியை மேம்படுத்த உதவிகளை வழங்கவும் ஆசிய அபிவிருத்தி வங்கியின் இலங்கைக்கான வதிவிட பிரதிநிதி டகபூமி கடோனோ இணக்கம் தெரிவித்தார்.

அதேபோல் இலங்கையில் வலுவச்தி மற்றும் சிறு தொழில் முயற்சிகளை மேம்படுத்த தேவையான நிதி உதவிகளை வழங்கவும், நிதித் துறையின் முன்னேற்றத்துக்கு தேவையான நிதி உதவிகளை வழங்கவும் ஆசிய அபிவிருத்தி வங்கி இணக்கம் தெரிவித்துள்ளது.

இலங்கைக்கான முன்னெடுப்புக்களின் பிரதானி சொல்பொத் மெம்பேடோவா (ஊாழடிழடெ ஆயஅடிநவழஎய), நிதி அமைச்சின் செயலாளர் மஹிந்த சிறிவர்தன, பணிப்பாளர் நாயகம் டீ.ஏ.பி.அபேசேகர, பணிப்பாளர் உதேனி உடுகஹபத்துவ, சிரேஷ்ட பொருளாதார அதிகாரிகளான ஹஷிதா விக்ரமசிங்க மற்றும் லக்ஷ ினி பெர்னாண்டோ ஆகியோரும் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர்.

## செயல்...

**(முதலாம் பக்கத் தொடர்ச்சி)**

இருந்து முழுமையாக ஒதுங்குவதற்குத் தீர்மானித்துள்ளதாகவும் முன்னாள் அமைச்சர் பௌஸி உதயத்துக்குத் தெரிவித்தார்.

1962 ஆம் ஆண்டு தீவிர அரசியலில் பிரவேசித்த பௌஸி கொழும்பு மாநகர சபை மேயராக, மாகாண அமைச்சராக பணியாற்றியுள்ளார். பின்னர் பாராளுமன்ற தேர்தலில் போட்டியிட்டு வெற்றியீட்டி போக்குவரத்து, சுகாதார,

சுற்றாடல், பெற்றோலிய வளத்துறை அமைச்சராக இருந்து மக்களின் அபிமானத்தை வென்ற அமைச்சராக பணி புரிந்தார். கடந்த தேர்தலில் தோல்வியுற்ற போதிலும் மாநகர சபை தேர்தலில் போட்டியிடுவதற்காக முஜிபுர் ரஹ்மான் உறுப்பினர் பதவியை இராஜினாமா செய்ததையடுத்து மீண்டும் பௌஸி பாராளுமன்ற உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்டார்.

## தாமரை...

**(முதலாம் பக்கத் தொடர்ச்சி)**

மாடியிலிருந்து வீழ்ந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த மாணவி தவறி வீழ்ந்தாரா அல்லது தற்கொலை செய்து கொண்டாரா என்ற கோணத்தில் விசாரணைகள் இடம்பெற்று வருவதாக பொலிஸார் தெரிவித்தனர்.

## ஹோட்டலில்...

**(முதலாம் பக்கத் தொடர்ச்சி)**

உத்தியோகத்திற்கு எதிராக விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. நுவரெலிய பிரதேச பதில் பிரதி பொலிஸ்மா அதிபர் மஹிந்த திஸாநாயக்கவின் பணிப்பின் பேரில் இவ் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இந்த விசாரணைக்காக நுவரெலிய போலீஸ் பிரிவில் அல்லாத வேறொரு பிரிவிலிருந்து ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளார். இது தொடர்பாக கூறப்படுவதாவது,

நுவரெலிய நகரில் இரவு பகலாக இயங்கி வரும் ஹோட்டல் ஒன்றில் கடந்த 2ம் திகதி போலீஸ் பரிசோதகர் ஒருவர் வருகை தந்து சாராய போத்தல் ஒன்றை வாங்கித் தருமாறு கேட்டுள்ளார். அதனை தன்னால் பெற்றுத் தர முடியாது என்று அந்த ஹோட்டல் உரிமையாளர் மறுத்துள்ளார். அடுத்த தினம் குறிப்பிட்ட போலீஸ் பரிசோதகர் ஹோட்டலுக்கு வந்து அருவருக்கத்தக்க வார்த்தை பிரயோகங்களால் உரிமையாளருக்கு ஏசி, அங்கிருந்த ஊழியர்களையும் தாக்கியுள்ளார். அத்தோடு அங்கு சமைக்கப்பட்டு இருந்த உணவுகளை உரிமையாளரை உண்ணுமாறும் பலவந்தமாக கேட்டுள்ளார். 4ம் திகதி அன்று சுகாதார பரிசோதகர்களை பயன்படுத்தி ஹோட்டலை மூடி விடுவதாக எச்சரிக்கை விடுத்துள்ளார். இது தொடர்பாக ஹோட்டல் உரிமையாளர் அப்துல் கபூர் முகமத் இர்ஷாத் (46) மேற்கொண்ட முறைப்பாட்டை அடுத்து இப்போது விசாரணை ஆரம்பிக்கப்பட்டுள்ளது. குறிப்பிட்ட போலீஸ் அதிகாரியின் செல்வாக்கினால் தனக்கு நீதி கிடைக்காமல் போகலாம் என்ற அச்சத்தில் போலீஸ் உத்தியோகத்தர் தனது ஹோட்டலுக்கு வந்து மேற்கொண்ட அராஜகங்கள் தொடர்பாக கண்காணிப்பு கேமராக்களின் காட்சிகளை தான் ஊடகங்களுக்கு வழங்கியதாக ஹோட்டல் உரிமையாளர் தெரிவித்துள்ளார். இந்த தகவல் கிடைத்தவுடன் குறிப்பிட்ட போலீஸ் உத்தியோகத்தர் வேறொரு பகுதிக்கு இடமாற்றம் செய்யப்பட்டு, வேறொரு பிரதேசத்தின் உதவி போலீஸ் அதிகாரியின் கீழ் ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாக பதில் பிரதி பொலிஸ் மாஅதிபர் மஹிந்த திஸாநாயக்க தெரிவித்தார். இச் சம்பவத்தால் பாதிப்புக்கு உள்ளான அப்துல் கபூர் முகமத் இர்ஷாத் நுவரெலிய போலீஸ் அத்தியகட்சர் அலுவலகத்திற்கு அழைக்கப்பட்டு, வாக்குமூலம் பெறப்பட்டுள்ளார்.

## பொதுத்...

**(முதலாம் பக்கத் தொடர்ச்சி)**

கொழும்பில் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பின் போது அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

## ரணிலின்...

**(முதலாம் பக்கத் தொடர்ச்சி)**

பாதுகாப்பிற்காக வழங்கப்பட்ட பாதுகாப்பு உத்தியோகத்தர்களை தற்போதைய ஜனாதிபதியின் பாதுகாப்பிற்காக வழங்க ஜனாதிபதி பாதுகாப்பு பிரிவு செயற்பட்டு வருகின்றது.

ரணில் விக்கிரமசிங்கவின் பாதுகாப்பிற்காக முன்னாள் ஜனாதிபதி பாதுகாப்பு பிரிவை (Ex-PSD 8 Division) நிறுவுவதற்கான ஏற்பாடுகள் நடைபெற்று வருவதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரதிப் பொலிஸ் மா அதிபர் நிஹால் தல்துவ தெரிவித்தார்.

முன்னாள் ஜனாதிபதியின் தற்போதைய பாதுகாப்பில் ஜனாதிபதி பாதுகாப்பு பிரிவின் முன்னாள் பணிப்பாளரின் (PSD) வழிகாட்டலின் கீழ் விசேட அதிரடிப்படையின் (STF) 50 பணியாளர்களுடன் பொலிஸ் அதிகாரிகள் உள்ளடங்குவதாக நிஹால் தல்துவ உறுதிப்படுத்தினார்.







# கண்டியில் தலைமை வேட்பாளராக களமிறங்கும் திஸ்ஸ அத்தநாயக்க

(ரஷீத் எம். றியாழ்)

ஐக்கிய மக்கள் சக்தியின் முன்னாள் தேசிய அமைப்பாளரும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான திஸ்ஸ அத்தநாயக்க இம்முறை பொதுத் தேர்தலில் கண்டி மாவட்டத்தின் தலைமை வேட்பாளராகப் போட்டியிடுவதாக ஊடகவியலாளர் சந்திப்பொன்றில் தெரிவித்தார்.

அவர் மேலும் கருத்து தெரிவிக்கையில், மக்களின் நன்மதிப்பை பெற்றுக் கொள்ளத்தக்க புரிந்துணர்வும் முன்மாதிரியும் கொண்ட தேர்தல் பிரசார நடவடிக்கை களை முன்னெடுப்பதே எமது நோக்கமாகும் என்றும் ஐக்கிய மக்கள் சக்தியின் பிரசார நடவடிக்கைகள் எதிர்வரும் 10 ஆந் திகதியில் இருந்து மாவட்டமெங்கும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.





உக்குவளை மாருகொன ஜும்ஆ மஸ்ஜித் ஜனாஸா நலன்புரிச்சங்க அங்கத்தவர்கள் ஒன்றினைந்து மாருகொன மஸ்ஜிதின் மையவாடி துப்புரவுப் பணியில் இம்மஸ்ஜித் தலைவரும் மாருகொன வாசிப்போர் ஒன்றியத் தலைவருமான தய்லமி ஹாஜி உட்பட மஸ்ஜித் நிர்வாக உறுப்பினர்கள் கலந்துகொண்டதை படத்தில் காணலாம்.

(படம்:உக்குவளை ஜலீல்)

# ஸூரிய்யா குர்ஆன் மத்ரசாவின் வருடாந்த பரிசளிப்பு விழா



(எம்.ரீ.ஆரிப் அநுராதபுரம்)

மரதன்கடவல ஸூரிய்யா குர்ஆன் மத்ரசாவின் வருடாந்த பரிசளிப்பு விழாவும் கலை விழாவும் அல் அமீன் முஸ்லிம் வித்தியாலய பிரதான மண்டபத்தில் எம். பாஹிம் (மௌலவி) தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் மரதன்கடவல பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி மனுசங்க, அல் அமீன் முஸ்லிம் வித்தியாலய அதிபர் எஸ்.எம். கௌஸ், இஹலப்புளியங்குளம் அந்நஹ்லா அஹதிய்யா பாடசாலையின் அதிபர் தேசமான்ய எம்.ஆர்.எம். ரனீஸ் மற்றும் அந்நஹ்லா அஹதிய்யா பாடசாலையின் நிர்வாகக் குழு தலைவர் தேசமான்ய பீ.ஜாயிஸ் ஆகியோர் அதிதிகளாக கலந்து கொண்டிருந்தனர்.

# இலங்கை அணியின் தலைமைப் பயிற்சியாளராக சனத் ஜெயசூர்யா 2026 வரை நியமனம்




இலங்கை கிரிக்கெட் அணியின் தலைமைப் பயிற்றுவிப்பாளராக சனத் ஜயசூரிய எதிர்வரும் 2026ஆம் ஆண்டு வரை நியமிக்கப்பட்டுள்ளதாக இலங்கை கிரிக்கெட் சபை இன்று உத்தியோகபூர்வமாக அறிவித்துள்ளது.

இன்றைய தினம் இலங்கை கிரிக்கெட் சபை வெளியிட்டுள்ள ஊடக அறிவிப்பில் இதனைக் குறிப்பிட்டுள்ளது. அவ்வறிவிப்பில், இடைக்கால தலைமைப் பயிற்சியாளராக ஜெயசூர்யா பொறுப்பேற்றிருந்த இந்தியா, இங்கிலாந்து மற்றும் நியூசிலாந்துக்கு எதிரான சமீபத்திய சுற்றுப்பயணங்களில் இலங்கை அணியின் சிறப்பான ஆட்டத்தை கருத்தில் கொண்டு இலங்கை கிரிக்கெட் நிர்வாகக் குழு இந்த முடிவை எடுத்துள்ளது.

அதற்கமைய சனத் ஜெயசூர்யா 2026ஆம் ஆண்டு இடம் பெறவுள்ள ரி20 உலகக் கிண்ணத் தொடர் வரை இலங்கை ஆடவர் கிரிக்கெட் அணியின் தலைமைப் பயிற்சியாளராக நியமிக்கப்பட்டுள்ளார். இந்த நியமனம் இவருடம் ஒக்டோபர் 1ஆம் திகதி முதல் நடைமுறைக்கு வந்தது, எதிர்வரும் 2026ஆம் ஆண்டு மார்ச் மாதம் 31ஆம் திகதி வரை இருக்கும் என அவ்வறிக்கையில் குறிப்பிட்டுள்ளது இலங்கை கிரிக்கெட் சபை என்பது குறிப்பிடத்தக்கது.

# பேருவளை வீதிகள் வெள்ளத்தில் மூழ்கின

(பேருவளை பீ.எம் முக்தார்)



பேருவளை பகுதியில் 7ஆம் திகதி (2024-10-07) அதிகாலை பெய்த கடும் மழை காரணமாக தாழ்ந்த பகுதிகள் நீரில் மூழ்கியுள்ளன.

பேருவளை நகர சபைக்கு உடபட சீனன்கோட்டை, மஸ்ஸல, மருதானை உட்பட பல பகுதிகளில் வீதிகள் வெள்ளத்தில் மூழ்கியதோடு போக்குவரத்தும் பாதிக்கப்பட்டன. சீனன்கோட்டை வீதி, நளீம் ஹாஜியார் மாவத்த, பெரேரா வீதி, ஜாமியா நளீமிய்யா மாவத்த, ஜாபிர் வீதி, நவ்பர் மாவத்த, ஸாலி ஹாஜியார் மாவத்த உட்பட பல பகுதிகளில் வெள்ளம் காணப்பட்டது.

# தேசிய மக்கள் சக்தியின் கீழ் போட்டியிட 500 பேர் விண்ணப்பம்

(ரஷீத் எம். றியாழ்)



பொதுத் தேர்தலில் தேசிய மக்கள் சக்தியின் கீழ் கண்டி மாவட்டத்தில் போட்டியிடுவதற்கு சுமார் 500 பேர் விண்ணப்பித்துள்ளதாக தேசிய மக்கள் சக்தியின் நிறைவேற்றுக் குழு உறுப்பினர் கே.டி. லால்காந்த தெரிவித்தார்.

கண்டி மாவட்டத்திற்கு 12 உறுப்பினர்கள் பாராளுமன்றத்துக்கு தெரிவு செய்யப்பட வேண்டும். வேட்பு மனுவில் 15 உறுப்பினர் களின் பெயர்கள் இடம் பெற்றிருக்க வேண்டும் என்ற நிலையில் சுமார் 500 பேர் எம்மிடம் விண்ணப்பித்துள்ளனர்.

பொதுத் தேர்தலில் போட்டியிடும் ஆர்வத்தில் கல்விமான்கள், வர்த்தகர்கள் மற்றும் இதற்கு முன்னர் ஏனைய அரசியல் கட்சிகளை பிரதிநிதித்துவப்படுத்தியவர்கள் என பலர் விண்ணப்பித்துள்ளனர்.

அபேட்ச்சர்களை தெரிவு செய்யும் நியமனக் குழு இதுவரை 60 பேர் மீது கவனம் செலுத்தியுள்ளது. இந்த 60 பேரில் இறுதியாக 15 பேர் தெரிவு செய்யப்படுவார்கள் என்றும் லால்காந்த தெரிவித்தார் .

# ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் அமைப்பின் சட்டப் பணிப்பாளராக ஹலீம் நியமனம்

(எம். எப். றிபாஸ்)

கல்முனை நற்பிட்டிமுனையைச் சேர்ந்த சட்டத்தரணி சீ. எம். ஹலீம் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் அமைப்பின் கிழக்கு மாகாண சட்டப்பணிப்பாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

"கிராமத்தின் கல்விக்கான கலங்கரை விளக்காக" இயங்கும் அல் கரீம் பவுண்டேஷன் அமைப்பின் பணிப்பாளராக செயற்பட்டு வரும் இவர் ஒரு சமூக சேவையாளராகவும், பல்வேறு பட்ட சமூக சேவை அமைப்புக்களின் பிரதிநிதியாகவும், ஆலோசகராவும் பதவிகள் வகித்து வருவதுடன் நற்பிட்டிமுனை கிராமத்தில் சிறந்த கல்விச் சமூகமொன்றை கட்டியெழுப்பு வதில் பெரும் பங்காற்றி செயற்படுகிறார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

# முஅத்தீன் இக்பாலுக்கு கௌரவிப்பு



(ஏ.எச்.எம்.ஹாரீஸ்)

மத்திய முகாம் முஹம்மதியா ஜு/ம்மா பள்ளிவாசலில் சுமார் 15 வருட காலம் தொடர்ச்சியாக பணியாற்றிய முஅத்தீன் எம்.ஏ.முஹம்மது இக்பால்யினை பாராட்டி கௌரவிக்கும் நிகழ்வு அண்மையில் (04) ஜும்மா தொழுகையைத் தொடர்ந்து இடம்பெற்று.

பள்ளிவாசல் தலைவர் எம்.சி.எம். பயாஸ் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் தலைவரினால் முஅத்தீன் முஹம்மது இக்பாலுக்கு நினைவுச் சின்னம் வழங்கி வைக்கப்பட்டதோடு, பள்ளிவாசலின் பேஸ் இமாம் எம். பி.ரிபாஸ், செயலாளர் கே.எல். ரிஸான், பொருளாளர் எம்.எஸ். எம்.இக்பால், ஆகியோரால் அன்பளிப்பு பொருட்களும் வழங்கி வைக்கப்பட்டது.

மேலும் தனவந்தர்கள், பொது அமைப்புகள் மற்றும் இளைஞர்கள் ஆகியோரினாலும் பணப் பரிசுகள் முஅத்தினுக்கு வழங்கி வைக்கப்பட்டது.15வருட காலம் சிறப்பாக சேவை செய்யக்கிடைத்தமை இறைவன் கொடுத்த அருட்கொடை என்றும், அன்பளிப்பு மற்றும் பணப் பரிசு வழங்கி கௌரவித்த அனைவருக்கும் மனமார்ந்த நன்றிகளை தெரிவித்துக் கொள்வதாக முஅத்தீன் முஹம்மது இக்பால் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் ஜம்மா பள்ளிவாசல் நிர்வாக உறுப்பினர்கள், தனவந்தர்கள், இளைஞர்கள் மற்றும் ஊர் பொதுமக்கள் என பலரும் கலந்து சிறப்பித்தனர்.



உலக சிறுவர்கள் தினத்தையொட்டி உக்குவளை மாருகொன பாத்திமா பாலர் பாடசாலையில் சிறுவர்களது சந்தை வியாபாரம் இடம்பெற்றதனை படத்தில் காணலாம்.

(படம்:உக்குவளை ஜலீல்)

www.uthayam.lk
உதயம்
சமூகங்களின் இருளகற்றும் தனித்துவக் குரல்
2024 OCTOBER 07 - MONDAY
WEB: www.uthayam.lk
E-mail: editor.uthayam@gmail.com
FB ID: உதயம்

# முஸ்லிம் பிரதிநிதித்துவத்தை பாதுகாக்கும் வழி என்ன..?

இன்னும் ஒரு வாரத்தில் பொதுத் தேர்தலுக்கான நியமனப் பத்திரங்கள் முழுமையாக ஏற்றுக் கொள்ளப்பட உள்ளன. சகல அரசியல் கட்சிகளும் தமது அபேட்சகர்களை தெரிவு செய்வதில் மும்முரமாக ஈடுபட்டு வருகின்றன. அரசியல் கட்சிகளுக்கு மேலதிகமாக பல சுயேட்சை குழுக்களும் போட்டிக்காக நியமன பத்திரங்களை தாக்கல் செய்து வருகின்றன.

முஸ்லிம் பிரதிநிதிகளும் ஏட்டிக்கு போட்டியாக நியமன பத்திரங்களை தாக்கல் செய்து வருவதனை அவதானிக்க கூடியதாக உள்ளது. பார்க்கின்ற பார்வையில் பாராளுமன்றத்தில் முஸ்லிம்களின் பிரதிநிதித்துவம் குறையலாம் என அச்சம் தெரிவிக்கப்படுகிறது.

நாட்டின் முஸ்லிம் சனத்தொகையை கருதிக்கொண்டால் குறைந்தது 20 பிரதிநிதிகளாவது தேர்வு செய்யப்பட வேண்டும். கடந்த கால தேர்தலின் போதும் 20, 25 என முஸ்லிம் பிரதிநிதிகள் தெரிவாகியுள்ளனர்.

அந்த நிலை இம்முறை தொடருமா என்பது குறித்து அரசியல் அவதானிகள் கேள்வி எழுப்பி உள்ளனர். காரணம் முஸ்லிம்கள் மத்தியில் வழமைக்கு மாறாக தேர்தல் பற்றிய ஆர்வம் அதிகரித்திருப்பதை காணக்கூடியதாக உள்ளது.

முஸ்லிம் அரசியல் பிரதிநிதிகளுக்குள் ஏற்படும் போட்டி மற்றும் புதிதாக தேசிய மக்கள் சக்தி களத்தில் இறங்கியிருப்பதன் காரணமாக முஸ்லிம் வாக்காளர்கள் என்றும் இல்லாதவாறு பிரிந்து செல்லும் நிலை உருவாகியுள்ளது. அதனால் முஸ்லிம் பிரதிநிதிகள் தெரிவாகும் வீதம் குறையக் கூடும். முஸ்லிம் அரசியல் கட்சிகள் இது குறித்து சிரத்தை காட்ட வேண்டும். முஸ்லிம் பிரதிநிதித்துவத்தை தக்க வைத்துக் கொள்ள அதற்கான உத்திகளை அறிமுகப்படுத்த முன்வர வேண்டும். முஸ்லிம் சிவில் சமூக அமைப்புகளுக்கும் இந்த விடயத்தில் பெரும் வகிபாகம் உண்டு என்பதை நினைவுபடுத்துகின்றோம்.

பாராளுமன்ற பிரதிநிதித்துவம் என்பது ஒரு சிறுபான்மை சமூகத்திற்கு மிகவும் முக்கியமானது. நாங்கள் ஒருவரை ஒருவர் வெட்டித் தீர்க்க வேண்டும் என்ற எண்ணத்தில் அபேட்சகர்களை தேர்தலில் நிறுத்துவதை விட யார் தேர்வு செய்யப்படலாம்? யாருக்கு ஆளுமை கூடுதலாக இருக்கிறது? யார் அடுத்த பாராளுமன்றத்துக்கு சென்றால் சமுதாய விஷயங்களை வெற்றிகொள்வார்? என்பதை பற்றி அவதானித்து அபேட்சகர்களை தேர்தலில் இறக்க வேண்டும்.

அன்பான சமூகத்தைப் பொறுத்த வரையில் ஏற்கனவே 30க்கும் மேற்பட்ட அபேட்சகர்கள் இம்முறை போட்டியிடுவதில்லை என தெரிவித்துள்ளனர். முஸ்லிம் சமூகத்தை பொறுத்தவரை இதுவரை ஒருவரோ இருவரோ மாத்திரம்தான் அவ்வாறான அறிவிப்புகளை செய்துள்ளனர். ஆகவே இது குறித்து முஸ்லிம் சமூகம் விழிப்புணர்வுடன் நடந்து கொண்டு முஸ்லிம் பிரதிநிதித்துவத்தை பாதுகாத்துக் கொள்ள கூட்டாக ஒத்துழைக்க வேண்டும்.

# பெருந் திரளானோர் பங்களிப்புடன் அஸ்ஹரின் ஜனாஸா நல்லடக்கம்



சிரேஷ்ட ஊடகவியலாளரும் ஓய்வுபெற்ற ஆசிரியரும் உதயம் பத்திரிகை, உதயம் இணையத்தின் செய்தியாளருமான அஸ்ஹர் இப்றாஹீம் நேற்று காலை காலமானார்.

அவரின் ஜனாஸா நேற்றிரவு 11.00 மணியளவில் மாளிகைக்காடு மஸ்ஜிதுத் தக்வா மஸ்ஜித் மையவாடியில் நல்லடக்கம் செய்யப்படும்.

மல்வானை மத்திய கல்லூரி, கல்முனை சாஹிரா கல்லூரி, பட்டிருப்பு தமிழ் மகா வித்தியாலயம் ஆகியவற்றில் ஆசிரியராக பணியாற்றியுள்ள இவர் சகலருடனும் அன்பாகவும் பண்பாகவும் பழகினார்.

சமூக சேவைகளிலும் ஆர்வம் காட்டிய இவர் ஊடகத் துறைக்கும் பெரும் பங்களிப்புச் செய்தார்.

இவரின் மறைவு குறித்து உதயம் ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவிக்கும் அதேவேளை அவரின் மறுமை வாழ்வு இறைவனின் பொருத்தத்தைப் பெற்றதாக அமைய பிரார்த்திக்கிறோம்.

# கண்டி தேர்தல் களத்தில் கிரிஎல்லவின் புதல்வி



**(ரஷீத் எம். றியாழ்)**

முன்னாள் அமைச்சர் லக்ஷ்மன் கிரிஎல்லவின் புதல்வி சட்டத்தரணி சாமிந்தானி கிரி எல்ல இம்முறை ஐக்கிய மக்கள் சக்தியின் சார்பில் பொதுத் தேர்தலில் கண்டி மாவட்ட வேட்பாளராகப் போட்டியிடுகின்றார்.

இதேவேளை முன்னாள் அமைச்சர் லக்ஷ்மன் கிரிஎல்ல தேசிய பட்டியலில் இடம்பெறுவாரென அறிவிக்கப்பட்டுள்ளது.

அமைச்சர் கிரிஎல்லவின் புதல்வி கண்டி மாவட்ட ஐக்கிய மகளிர் அமைப்பின் முக்கிய அமைப்பாளராகவும் செயல்படுகிறார். இம்முறை கண்டி மாவட்டத்தில் ஐக்கிய மக்கள் சக்தியின் சார்பில் இன்னும் சில புது முகங்கள் களத்தில் இறங்குமென அரசியல் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.



# மஜ்மா நகரை அலங்கரிக்கும் பள்ளிவாசல், பல்துறை கட்டிடம்

## வைபவ ரீதியாக மக்களிடம் கையளிப்பு!




(பேருவளை பீ.எம்.முக்தார்)

கிழக்கு இலங்கையின் மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள ஓட்டமாவடி- மஜ்மா நகரில் அமையப் பெற்றுள்ள கொரோனா மையவாடியில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட பள்ளிவாசலும் அதனுடன் கூடிய பல் துறை கட்டிடத் தொகுதியும் கடந்த செவ்வாய்க்கிழமை(3024-10-01) மாலை 3.20 மணிக்கு வைபவ ரீதியாக திறந்து வைக்கப்பட்டு மக்கள் பாவனைக்காக ஏ.இஸட்.எம்.ஸவாஹிர் ஹாஜியாரினால் வக்பு பிரகடனம் செய்யப்பட்டது.

கோவிட் 19 என்னும் கொரோனா தொற்று 2019 ஆம் ஆண்டின் இறுதி பகுதியில் உலகையே பெரும் கலக்குக் கலக்கி பல்லாயிரக்கணக்கான மனித உயிர்கள் பலியான நிகழ்வு உலக வரலாற்றில் கரும்புள்ளியாக பதிவாகியது. அதில் எமது இலங்கை தீவிலும் பல உயிர்கள் காவு கொள்ளப்பட்டன.

எமது நாட்டில் கொரோனா மேலும் பரவுவதை தவிர்க்கும் போர்வையில் இலங்கையின் அப்போதைய அரசால் தன்னிச்சையாக பல தீர்மானங்கள் எடுக்கப்பட்டன அரசால் அமர்த்தப்பட்ட சுகாதாரப் பிரிவினரால் கொரோனா தொற்றினால் சம்பவிக்கும் சகல மரணங்களின் பூத உடல்களும் எரிக்கப்பட்டு சாம்பலாக்கப்பட வேண்டும் என்ற சட்டம் பிறப்பிக்கப்பட்டது.

அதற்கிணங்க முஸ்லிம் ஜனாஸாக்களும் எமது மார்க்க விதிமுறையை மீறி எரிப்புக்குள்ளாக்கப்பட்டன. உள்நாட்டிலும் வெளிநாடுகள் பலவற்றினதும் எதிர்ப்பு காரணமாக பின்னர் குறிப்பிட்ட இடம் ஒன்றில் நல்லடக்கம் செய்ய அரசு இணக்கத்திற்கு வந்தது. ஒரு சந்தர்ப்பத்தில் மாலைதீவில் உள்ள ஒரு தீவு அரசால் முன்வைக்கப்பட்டது. இலங்கையில் சில இடங்கள் சிபாரிசு செய்யப்பட்டு சில தரப்பினரால் எதிர்ப்பும் தெரிவிக்கப்பட்ட நிலையில் ஓட்டமாவடி மஜ்மா நகரில் நல்லடக்கம் செய்ய சம்பந்தப்பட்ட முஸ்லிம் நலன் விரும்பிகளால் மேற்படி சுமார் 17 ஏக்கர் விஸ்தீரணம் கொண்ட காணி கையளிக்கப்பட்டது.

கொரோனாவில் மரணமான சகல இன மதத்தவர்களின் சடலங்கள் 2021-03-04 ஆம் திகதி முதல் நல்லடக்கம் செய்யப்பட்டு வந்தன.

இந்த வரிசையில் 2022 மாதம் 10 ஆம் திகதி வபாத்தான பேருவளை சீனன்கோட்டையைச் சேர்ந்த ஹாஜியாணி இரீபத்துல் ஹைறா என்பவரின் மரணமும் கொரோனா தொற்றினால் ஏற்பட்டது என்று தெரிவிக்கப்பட்டதன் விளைவாக மஜ்மா நகர் மையாவாடியில் நல்லடக்கம் செய்யப்பட்டது. அடக்கத்திற்கு கிராம அடிப்படையில் வழங்கப்பட்ட இலக்கம் 3330 என நடப்பட்ட அடையாள கல்லில் பதிக்கப்பட்டுள்ளது. அந்த வகையில் 2021 மார்ச் 4ஆம் திகதி முதல் 2022 மார்ச் 4ஆம் திகதி வரையில் மொத்தமாக 3634 பூதவுடல்கள் இங்கு நல்லடக்கம் செய்யப்பட்டுள்ளன. இவற்றுள் 2985 பூதவுடல்கள் முஸ்லிம்களுடையதாகும். 293 பௌத்தர்களதும், 269 ஹிந்துக்களதும், 86 கிறிஸ்தவர்களும் சடலங்கள் இங்கு சமாதியாகப்பட்டுள்ளன.

17 ஏக்கர் மையவாடி காணிகளும் சுமார் 13 முஸ்லிம் குடும்பங்களுக்கு சொந்தமான இடங்களாகும். இவை அப்போது குறிப்பிட்ட குடும்பங்களுக்கு சேனைப் பயிற்ச் செய்கை மூலம் வாழ்வாதாரத்திற்கு வருமானம் ஈட்டிக் கொண்டிருந்தனவாக தெரிவிக்கப்படுகிறது. சமூகத்தின் நன்மைக்காக இவர்களால் தியாகத்துடன் கையளிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. ஆனால் இந்த உரிமையாளர்களுக்கு இதுவரையும் மாற்றுக்காணிகளோ நஷ்ட ஈடுகளோ வழங்கப்படவில்லை என்று சம்பந்தப்பட்டோர் தம் ஆதங்கங்களை வெளியிட்டு வருவதையும் கேட்க முடிகிறது.

இங்கு அடக்கம் செய்யப்பட்டோரின் குடும்பத்தினர் தத்தம் உறவுகளின் கல்லறைகளை தரிசிப்பதற்காக அவ்வப்போது வருகை தந்த வண்ணமுள்ளனர். இவ்வாறு சீனன்கோட்டை இரீபதுல் ஹைறாவின் கணவர் மற்றும் பிள்ளைகளும் வருவதும் வழக்கம். அப்போது இந்த இடத்திற்கு வருகை தருவோர் அடிப்படை வசதிகள் குறைவால் அனுபவிக்கும் அசௌகரியங்கள் இவர்கள் பார்வைக்கும் வெளிச்சமாகியுள்ள சந்தர்ப்பங்கள் பல. இவற்றின் விளைவாகவே பள்ளிவாசலும் பல் தேவைக் கட்டிடங்களும் நிர்வாணம் பெற வழி வகுத்துள்ளன.

ஏ. இஸட். எம்.ஸவாஹிர் ஹாஜியார் மற்றும் அவரது பிள்ளைகளான பிரபல இரத்தினக்கல் வர்த்தகர்களான ரிகாஸ் ஸவாஹிர் மற்றும் குடும்பத்தினர் ஆகியோர்களின் இணைப்பில் பள்ளியும் பல் தேவை கட்டிடங்களும் நிர்மாணிக்கப்பட்டு 2024 அக்டோபர் 1 திகதி அஸர் தொழுகை நேரத்தில் உத்தியோகபூர்வமாக திறந்து விடப்பட்டுள்ளன.

இந்த வைபவத்தில் அகில இலங்கை ஜம்மியத்துல் உலமா முக்கியஸ்தர்கள் பொருளாளர் கலாநிதி அஸ்வர் அஸாகிம் (அஸ்ஹரி) முஸ்லிம் சமய பண்பாட்டு அலுவல்கள் பணிப்பாளர் எம்.எஸ்.எம் நவாஸ் உள்ளிட்ட பிரமுகர்கள்,நாட்டின் பல பாவங்களையும் சேர்ந்த உயர் அதிகாரிகள் ஆர்வலர்கள் என்று பெரும் திரளானோர் வருகை தந்திருந்தனர். அன்றைய தினம் அஸர், மஃரிப்,இஷா ஆகிய தொழுகைகளுக்காக பள்ளிவாசல் நிரம்பி இடம் இன்மை காரணமாக பல ஜமாத் தொடர்ச்சியாக தொழுகைகள் நடத்தப்பட்டமையும் காணக் கூடியதாக இருந்தன.

ஆரம்பத்தில் முதல் முதலாக வக்பு செய்யும் நிகழ்வு இடம் பெற்றது. கட்டிடத்தை பூரணமான நிலையில் நிர்மானித்து கொடுத்த மர்ஹூமா இரீபதுல் ஹைறாவின் குடும்பத் தலைவரான அல் ஹாஜ் ஏ.இஸட்.எம்.ஸவாஹிர் வக்ப் பிரகடணத்தை வெளியிட்டார். அவரது உள்ளத்திலிருந்து வெளிப்பட்ட சோகத்தின் வெளிப்பாடாக கண்ணீர் மழை பொழிந்தவாறாக வக்ப் பிரகடணம் நடந்து முடிந்தது. அப்போது திரண்டிருந்த மக்கள் வெள்ளத்திலும் கண்ணீரும் கலந்து பெருக்கெடுக்கவே செய்தது அதனைத் தொடர்ந்து கட்டிடத்துக்கான சாவிகளும் கையளிக்கப்பட்டன.

இப்பள்ளியில் முதல் முதலாவதாக இடம் பெற்ற அஸர் தொழுகைக்கான அதான் சீனன் கோட்டை ஸஹ்ரான் முர்ஸியால் நிகழ்த்தப்பட்டது.

அதனைத் தொடர்ந்து பிரமுகர்கள் முக்கியஸ்தர்களால் கருத்துரை ,வாழ்த்துரைகள் வழங்கப்பட்டன. அவற்றின் இரத்தின சுருக்கம் வருமாறு

**பிரதேச சபை செயலாளர்-**

கொரோனா மரணக்கிரியைகள் தொடர்பான பொறுப்பு வாய்ந்த ராணுவ அதிகாரி ஒரு பௌத்தராக இருந்தபோதும் அவரது தாயாரின் இறுதிக் கிரியையை நல்லடக்கம் செய்ய வேண்டும் என்று பணித்திருந்தார். அதனால் கொரோனா மரணங்களையும் அவ்வாறு நிறைவேற்ற அனுமதி வழங்கப்பட்டமையை அவர் மணமுகந்து வரவேற்ற நிலையிலேயே மஜ்மா நகர் தேர்ந்தெடுக்கப்பட்டது.

இந்த மைய வாடி காணிகளில் விவசாயம் செய்யப்பட்டு ஏழை மக்களின் ஜீவனோபாயத்திற்கு கை கொடுத்துக் கொண்டிருந்த பூமியாகும். மையவாடியாக்கப்பட்டதை தொடர்ந்து இங்கிருந்த சிறு சிறு கட்டிடங்கள் அகற்றப்பட்டன.

காத்தான்குடி, ஏராவூர், ஓட்டமாவடி, கண்டி மாவட்டம், மத்திய மாகாணம் உள்ளிட்ட உலமா சபையினர் குறிப்பாக சகரியா மௌலவி,அப்ஸல் மரிக்கார் உள்ளிட்டோர் ஆரம்பத்தில் உதவி ஒத்தாசைகளை வழங்கினார்.இந்த வரிசையில் தான் தற்போது சீனன்கோட்டை ஸவாஹிர் ஹாஜியார் குடும்பத்தினரால் மற்றொரு மைல்கல்லாக பள்ளி பல்துறை கட்டிடங்கள் எழுப்பப்பட்டுள்ளன.

கொரோனாவின் முதல் அலையில் சுமார் 360 மரணங்களே பதிவாகின. அவ்வவளவு தான் என்றே எடை போடப்பட்டே பயன்பாட்டுக்கு முன் வந்தோம். ஆனால் இரண்டாம் மூன்றாம் அலைகளே மிகவும் உக்கிர நிலைக்கு வந்தது. சில சமயம் ஒரு தினத்தில் 80 பூதவுடல்கள் அடக்கம் செய்யும் நிலைக்கு ஆளாகி தொற்று வீடுகளில் பரவும் என்ற பீதியில் நாம் தொடர்ச்சியாக வீடுகளுக்கு செல்லாது முடங்கி இருந்தோம் கடலில் குளித்து தொற்று நீக்கிக்கொண்டோம்.

கல்குடா மக்கள் அஞ்சாது வரும் சடலங்களை வரவேற்று உரிய பணிகளில் ஈடுபடவும் தவறவில்லை. இப்பள்ளி நிர்மாணிப்போடு நின்று விடாது இங்குள்ள தேவைகள் வசதி படைத்தோரால் தொடர ப்பட வேண்டும்.இது ஒரு தேசிய சொத்து அரசும் உதவ வேண்டும் என்றார்.

இது ஒரு வரலாற்று முக்கிய நிகழ்வாகும். இது பல தகவல்களை சொல்கிறது. தியாகம் அர்ப்பணிப்புக்கு சிறந்ததொரு எடுத்துக்காட்டாகும்.

அல்லாஹ் சிலரை கண்ணியப்படுத்துகிறான். சிலரை தாழ்த்தி விடுகிறான். இம் மையவாடியின் தோற்றத்தால் கல்குடா கண்ணியம் பெறுகிறது. இப்பகுதிக்கு இதுவரையில் வருகை தராதோரும் தரிசிக்க வருகிறார்கள். இப்பள்ளி கட்டிடத்தால் சீனன்கோட்டை ஜவாஹிர் ஹாஜியார் குடும்பமும் வரலாற்றில் இடம் பிடித்து அல்லாஹ்வின் கண்ணியத்திற்குரியவர்களாக உயர்வு பெறுகிறார்கள்.

கோவிட்-19 ஜனாஸா மையவாடியும் நாட்டின் வரலாற்றில் ஓர் அத்தியாயமாக பதிவாகிறது.

**கிழக்குப் பல்கலைக்கழக விரிவுரையாளர் எம்.ரீ.எம்.றிஸ்வி தனது உரையில் கூறியதாவது**

அல்குர்ஆன் இயம்பும் குகை வாசிகளின் வரலாற்று நினைவாக கட்டிடம் அமைய பெறுவது முக்கியத்துவம் பெறுகிறது அதேபோன்று "பைத்துல் ஹைறா" மஸ்ஜித் உள்ளிட்ட கட்டிடத் தொகுதி நிர்மாணிப்பும் எதிர்காலத்தில் வரலாறாய் விளங்கப் போகிறது. இதுவும் ஒரு சதக்கத்துல் ஜாரியாவாகும் நிலையான தர்மங்களில் ஒன்றாகும். 2021 இல் ஆரம்பமான இந்த இடம் 2024-10-01 திகதி மீண்டும் உயிர்ப்பிக்கப்படுகிறது.

**பிரதேச சபை செயலாளர் எம்.எஸ். சிஹாப்தீன் பேசும்போது-**

இம்மையவாடி ஆரம்பிக்கப்பட்ட நாள் முதல் நாம் சமூகத்துக்காக அல்லாஹ்வுக்காக அல்லும் பகலும் அயராது பாடுபட்டு வந்துள்ளோம் தூங்காத இரவுகள் பல இராணுவ அதிகாரிகளிடமிருந்து அழைப்பு வந்த வண்ணமே இருக்கும் எமது குழு உடன் செயலில் இறங்கும்.

ஒரு ரமலான் மாதம் 27ஆம் நாள் புனித லைலத்துல் கதிர் இரவை ஹயாத்தாக்குவதற்காக அன்று இரவு 8:00 மணியுடன் எமது பணிகளை முடித்து பள்ளிகளில் ஆத்மீக கிரியைகளில் ஈடு பட்டுக் கொண்டிருந்தோம். ஆனாலும் ஜனாஸா அடக்கப் பணிகளுக்காக அழைப்புக்கு மேல் அழைப்பு வந்த வண்ணம் இருந்தது. ஜனாஸா ஒன்று அடக்க தாமதிக்கும் பட்சத்தில் ஊதி பெருக்கு வெடிக்கும் தருவாயில் மிக அவசரமாக அடக்க வேண்டிய நிர்ப்பந்தத்திற்கு ஆளானோம். எமது வணக்க வழிபாடுகளை கைவிட்டு இந்த கடமைக்கு முன்னுரிமை கொடுத்து செயலில் இறங்கினோம். நள்ளிரவு பன்னிரண்டு மணியையும் தாண்டி பணிகளில் ஈடுபட்டமை தியாகத்தின் உச்ச நிலை என்றே கூறலாம். நான் ஒருவன் தன்ன தனியாக இருந்து இதனை சாதித்தமையை கூறிக் கொள்கிறேன் என்றார்.

சீனன்கோட்டை நன்கொடையாளர் ஏ.இஸட்.எம்.ஸவாஹிர் ஹாஜியார் தனது ஏற்புறையில் கூறியதாவது கொரோனா தாண்டவம் ஆடிய காலகட்டத்தில் எமது சமூகம் பெரும் பீதியுடனும் நம்பிக்கையீனத்துடனும் திண்டாடிக் கொண்டிருந்தது. உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் இருந்து வந்த அழுத்தங்கள் காரணமாக மஜ்மா நகரில் நல்லடக்கம் செய்ய பணிக்கப்பட்டமை குறித்து அல்லாஹ்வுக்கு நன்றி தெரிவிக்க கடமைப்பட்டுள்ளோம். அல்ஹம்துலில்லாஹ்.

மையவாடிக்குரிய விவசாய பூமியை தியாகத்துடன் தந்துதவிய மக்களுக்கும் இப்பகுதி மக்களுக்கும் அல்லாஹ் கிருபை செய்வானாக. உதாரணத்திற்கு மக்காவிலிருந்து மதீனா நகருக்கு இடம் பெயர்ந்த ரசூல் (ஸல்) அவர்களுக்கும் ஸஹாபாக்களுக்கும் நல்ல வரவேற்பளித்த மதீனாவாசிகள் வரலாற்றில் புகழ்பாடப்படுவது போன்று ஓட்டமாவடி மக்களும் பாராட்டி புகழப்பட வேண்டியவர்களே. இலங்கை வரலாற்றில் மட்டுமின்றி உலக வரலாற்றிலும் கொரோனா மையவாடியான மஜ்மா நகர் நிச்சயம் சிறப்பு இடம்பெறும் என்பதில் ஐயமில்லை.

இப்பள்ளியின் நிர்மாணிப்போடு இப்பகுதி மேலும் செழிப்படையவே செய்யும் மேலும் இம்மையவாடி பகுதியில் சுற்றி மதில் இடப்படும் தேவை உள்ளது. அத்துடன் மின் விளக்குகள் பொருத்தப்பட்டு எப்போதும் பிரகாசத்துடன் இருக்கச் செய்ய வேண்டும்.

மிகவும் திறமை ஆற்றல் வாய்ந்த தக்வா தாரிகளை உள்ளடக்கிய சுமார் 20 பேர்களை கொண்ட நம்பிக்கையாளர் சபை ஒன்றும் உருவாக்கப்பட வேண்டும். இதில் அ.இ.ஜ உலமா, மற்றும் முஸ்லிம் கலாச்சார திணைக்கள பிரதிநிதிகள் உள்வாங்கப்பட்ட பலம் வாய்ந்த சபையாக பரிணமிக்கச் செய்வது சிறந்த நிர்வாகத்திற்கு வழிவகுக்கும். தற்போது 7 ஏக்கர் காணிகளே மைய வாடிக்கென ஒதுக்கப்பட்டுள்ளது. எஞ்சியுள்ள பகுதிகள் எதிர்கால பல் தேவைகளுக்கும் பயன்படுத்தப்படுவதானது நியமிக்கப்படும் நம்பிக்கையாளர் சபையின் பொறுப்பில் இருக்கும். இப்பகுதியின் ஒலிப்பும் இதிலே தான் தங்கி உள்ளது என்றார்.

**அகில இலங்கை ஜம்மியத்துல் உலமாவின் பொருளாளர் கலாநிதி அஸ்வர் அஸாஹிம் உரையில் கூறியதாவது,**

எமது இலங்கையைத் தவிர, உலகில் வேறு எந்த நாட்டிலும் கொரோனா மரண பூதவுடல்கள் நிர்ப்பந்த எதிர்ப்புக்கு ஆளாக்கப்படவில்லை. இதனால் எல்லா உலக நாடுகளினதும் கவனம் இலங்கை மீதே இருந்த தருணத்தில் நல்லடக்கம் செய்ய அனுமதி கிடைத்து, ஓட்டமாவடி மஜ்மா நகர் அதற்காக முன்வந்தமை உலக வரலாற்றிலும் சிறப்பிடம் பிடித்து விட்டது. அதே போன்று இப்போது திறந்து வைக்கப்பட்ட பள்ளியும் பல்துறைக் கட்டிடமும் உலக வரலாற்றிலும் ஊன்றிப் பதியப்படும் என்பதில் ஐயமில்லை என்று குறிப்பிட்ட கலாநிதி. அஸ்வர் அஸாஹிம் தொடர்ந்தும் கூறியதாவது,

இந்த இடம் காலகாலமாக ஓர் அடையாளச் சின்னமாக விளங்கப் போகிறது. இலங்கையில் முதலாவது முஸ்லிம் குடியேற்றம் நிகழ்ந்த அடையாளச் சின்னமாக பேருவளை மஸ்ஜிதுல் அப்ரார் பள்ளிவாசல் விளங்குகிறது. அதன் 1100 ஆவது ஆண்டை அண்மையில் நினைவு கூர்ந்தோம். அதே போன்றே கொரோனா மையவாடியும் "பைத்துல் ஹைறா" பள்ளிக் கட்டிடமும் வரலாற்றை சான்று பகர்ந்து கொண்டே இருக்கும்.

கொரோனாவின் ஆரம்ப காலகட்டத்தில் மரணமாவோரின் குடும்பங்கள் ஜனாஸா எரிக்கப்படுமோ என்ற பெரும் பீதியுடனே இருந்த நிலையில் அல்லாஹ் அந்த பேராபத்தில் நின்றும் முஸ்லிம் சமூகத்தைக் காப்பாற்றினான். நல்லடக்கத்திற்கு மஜ்மா நகர் காணி உரிமையாளர்களும், தியாகிகளும் கைகொடுத்து வரலாறு படைத்துள்ளார்கள்.

இன்று ஸதகத்துல் ஜாரிஆ வான நிலையான தர்மம் ஒன்றைச் செய்து பேருவளை சீனன்கோட்டை ஸவாஹிர் ஹாஜியாரும் அவர் பிள்ளைகளும் மற்றொரு மைல் கல்லை நிலை நாட்டியுள்ளார்கள்.

கொரோனா மரணம் என்று கூறப்பட்ட நிலையில் பேருவளை சீனன்கோட்டையைச் சேர்ந்த ஹாஜியானி இரீபதுல் ஹைறா மஜ்மா நகர் மையவாடியில் நல்லடக்கம் செய்யப்பட்டார். அவரது கணவரும் பிள்ளைகளும் இரீபதுல் ஹைறாவின் பெயரால் பள்ளியுடன் கூடிய கட்டடத்தை நிறுவி வக்ஃபு செய்துள்ளார்கள். மர்ஹூமா ஹைறா உட்பட அவரது கணவர் ஸவாஹிர் ஹாஜியாரும், பிள்ளைகளும் ஊரில் பாடசாலை, கல்லி உள்ளிட்ட பலதரப்பட்ட பொதுநல சேவைகளில் தம்மை அர்ப்பணிப்புச் செய்து வருகிறார்கள். இவற்றின் மற்றோர் அங்கமாக மஜ்மா நகர் பள்ளியும் அமைந்தது.

அல்லாஹ் சுவர்க்கத்தில் அழகிய மாளிகையை கொடுக்க பிரார்த்திப்போம்.

மறைந்த இரீபதுல் ஹைறாவும் நற்பாக்கியம் பெற்ற ஒருவர். ஷாதுலியா தரீக்காவின் அன்றைய செய்/ஹ நாயகம் கலாநிதி பாஸி இலங்கை வந்திருந்த சந்தர்ப்பத்தில் அவரது புதல்விகளில் ஒருவரின் பெயரான இரீபதுல் ஹைறா என்ற பெயரை இவருக்கு சூட்டி அந்த நற்பேறோடு முன்மாதிரி மிக்க பெண்ணாக வாழ்ந்தவராவார். இன்று அவரது கணவர், பிள்ளைகளால் ஸதகதுல் ஜாரிஆ வான நன்மைகளைப் பெற பெரும் பாக்கியத்தை அடைய அல்லாஹ் அருள் புரிந்துள்ளான்.







**ஐ.ம.சக்தி...**

**(முதலாம் பக்கத் தொடர்ச்சி)**

முன்வைக்கப்பட்டு வரும் ஆட்சேபனைகள் மற்றும் பிரச்சினைகள் குறித்து ஆராய்ந்து அறிக்கையை சமர்ப்பிப்பதற்காக கட்சியின் தலைவர் சஜித் பிரேமதாசவின் அறிவுறுத்தலின்படி, கட்சியின் பொதுச் செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார அவர்களால் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் எரான் விக்கிரமரத்ன தலைமையில் குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி சட்டத்தரணிகளான தினால் பிலிப், நளின் திசாநாயக்க மற்றும் எஸ்.டி.ஜயநாத ஆகியோர் இக்குழுவில் நியமிக்கப்பட்டுள்ள ஏனைய உறுப்பினர்கள் ஆவர். இக் குழுவின் அறிக்கையை உடனடியாக கட்சியின் வேட்புமனு குழுவிற்கு சமர்ப்பிக்குமாறு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது.

# அல்குர்ஆன் உங்கள் இதயத்துடன் பேசுகிறது....

**(இப்னு தவ்பீக் ஆலீம்)**

**அடுத்தவர் வீட்டில் நுழைய அனுமதி**

"விசுவாசிகளே! உங்களுடையதல்லாத வீடுகளில் நீங்கள் (நுழையக் கருதினால்) அதில் இருப்பவர்களுக்கு ஸலாம் கூறி (அவர்களுடைய) அனுமதியைப் பெறாதவரையில் நுழையாதீர்கள். இவ்வாறு நடந்துகொள்வது உங்களுக்கே மிக்க நல்லது. நீங்கள் (இதனை மறந்து விடாது) கவனத்தில் வைப்பீர்களாக" (24:27)

"அவ்வீட்டில் (இருப்பவரில் எவரையுமே நீங்கள் காணாவிடில், உங்களுக்கு அனுமதி கிடைக்கும் வரையில் அதில் நுழையாதீர்கள். (துவிர இதுசமயம் வீட்டில் நுழையாது) நீங்கள் திரும்பிவிடுங்கள் என்று (அவ்வீட்டிலிருக்கும் பெண்கள் முதலிய எவராலும்) உங்களுக்குக் கூறப்பெற்றால் அவ்வாறே நீங்கள் திரும்பிவிடுங்கள். இதுவே உங்களைப் பரிசுத்தமாக்கி வைக்கும். நீங்கள் செய்பவைகளை அல்லாஹ் நன்கறிந்து கொள்கிறான்" (24:28)

**பரிசுத்தமாக்கும் வழி எது?**

"(நபியே!) விசுவாசிகளான ஆண்களுக்கு நீர் கூறும்: அவர்கள் தங்கள் பார்வைகளைக் கீழ்நோக்கியே வைக்கவும். தங்கள் கற்பையும் இரட்சித்துக் கொள்ளவும். இது அவர்களைப் பரிசுத்தமாக்கி வைக்கும். நிச்சயமாக அவர்கள் செய்பவைகளை அல்லாஹ் நன்கறிந்து கொள்கிறான்"(24:30)

"(நபியே!) விசுவாசமுள்ள பெண்களுக்கும் நீர் கூறும்:- அவர்களுக்கும் தங்கள் பார்வையைக் கீழ்நோக்கியே வைத்து தங்கள் கற்பையும் இரட்சித்துக் கொள்ளவும். (அன்றி தங்கள் தேகத்தில் பெரும்பாலும் வெளியில் தெரியக் கூடியவைகளைத் தவிர தங்கள் அழகையும் (ஆடை ஆபரணம் போன்ற) அலங்காரத்தினையும் வெளிக்காட்டாது மறைத்துக்கொள்ளவும். தங்கள் முந்தானைகளால் மார்பையும் மறைத்துக்கொள்ளவும்" (24:31)

**அல்லாஹ்வின் அருளை அடைய வழி**

"(விசுவாசிகளே!) தொழுகையைக் கடைப்பிடித்தொழுகி, ஸக்காத்தும் கொடுத்து (அவனுடைய) தூதரை (முற்றிலும்) பின்பற்றி வாருங்கள். நீங்கள் (இறைவனுடைய) அருளை அடைவீர்கள்." (24:56)

**மேலாடைகளைக் களைவதில் கிழவிகளின் நிலை"**

"விவாக விருப்பமற்ற முதிர்ந்த வயதுடைய (நடமாட முடியாது உட்கார்ந்தே இருக்கக் கூடிய) கிழவிகள் தங்கள் அழகைக் காண்பிக்க வேண்டுமென்ற நோக்கமின்றித் தங்கள் மேலாடைகளைக் களைந்து வீட்டில் இருப்பதில் அவர்கள் மீது குற்றமில்லை. இதனையும் அவர்கள் தவிர்த்துக் கொள்வதே அவர்களுக்கு மிக்க நன்று. அல்லாஹ் யாவையும் செவியுறுவோனும், நன்கறிந்தோனுமாக இருக்கின்றான்." (24:60)

**நன்றிமிக்க அடியாரின் அடையாளம்**

"ரஹ்மானுடைய (நன்றிமிக்க) அடியார்கள் (எவரென்றால்) பூமியில் (அடக்கமாகவும்) பணிவாகவும் நடப்பார்கள். மூடர்கள் அவர்களுடன் தர்க்கிக்க முற்பட்டால், "ஸலாமுன்" என்று கூறி (அவர்களை விட்டு விலகி) விடுவார்கள்." (25:63)

"அன்றி அவர்கள் தங்கள் இறைவனை நின்றவர்களாகவும், சிரம் பணிந்தவர்களாகவும் இரவெல்லாம் வணங்கிக்கொண்டிருப்பார்கள்." (25:64)

"தவிர அவர்கள் "எங்கள் இறைவனே, நரகத்தின் வேதனையை எங்களைவிட்டு நீ தடுத்துக்கொள்வாயாக: ஏனென்றால், அதன் வேதனையானது நிச்சயமாக நிலையான துன்பமாகும்" என்று பிரார்த்தனை செய்துகொண்டே இருப்பார்கள்." (25:65)

"அன்றி அவர்கள் செலவுசெய்தால், அளவைக் கடந்துவிட மாட்டார்கள் உலோபித்தனமும் செய்யமாட்டார்கள் இதற்கு மத்திய தரத்தில் இருப்பார்கள்." (25:67)

"அன்றி அவர்கள் அல்லாஹ்வுடன் வேறொருவரையும் ஆண்டவன் என்று அழைக்க மாட்டார்கள் அல்லாஹ் (கொலை செய்யக் கூடாதென்று தடுத்திருக்கும்) எம்மனிதனையும் அவர்கள் நியாயமின்றிக் கொலை செய்துவிடவும் மாட்டார்கள். விபச்சாரமும் செய்ய மாட்டார்கள்- ஆகவே, எவரேனும் இவற்றைச் செய்ய முற்பட்டால் அவன் அந்தப் பாவத்திற்குரிய தண்டனையை அடைய நேரிடும்." (25:68)

**கபோதியும், அறிவுடையோனும்**

"உம் இறைவனால் உமக்கு அருளப்பட்ட (வேதத்)தை (அது) உண்மைதான் என்று உறுதியாக நம்புபவன் (பார்வையிழந்த) கபோதிக்கு ஒப்பாவானா?(ஆகமாட்டான்.) நிச்சயமாக (இதனைக் கொண்டு) நல்லுபதேசம் பெற்றுக்கொள்வோரெல்லாம் அறிவுடையோர்தாம்." (13:19)

"அவர்கள் (எத்தகையோரென்றால்) அல்லாஹ்விடம் செய்த வாக்குறுதியைப் பூரணமாக நிறைவேற்றவோர்களேயன்றித் தாங்கள் செய்த உடன்படிக்கையை முறித்துவிட மாட்டார்கள்." (13:20)

"மேலும் அவர்கள் அல்லாஹ் சேர்த்து வைக்கும்படி கட்டளையிட்டதையும் சேர்த்து வைப்பார்கள். தங்கள் இறைவனுக்குப் பயந்தும் நடப்பார்கள் (மறுமையில் கேட்கப்படும்) கொடிய கேள்விகளைப் பற்றி எந்நேரமும் பயந்துகொண்டும் இருப்பார்கள்."(13:21)

# 2 நாள் அறபு எழுத்தணி பயிற்சி வகுப்பு - 2024

– அறபு எழுத்தணிக் கலையில் ஆர்வமுள்ள கொழும்பு மற்றும் அன்மித்த அறபுக் கல்லூரி ஆண் மாணவர்கள் விண்ணப்பிக்க முடியும்

**வளவாளர்கள்:**

- Ash Shaikh Junaid Naseer Naleemi (SLTS, BA, Dip in Edu, M.Ed)

- Al Alim S. Majeem Yousufi (India)
Lecturer  Dharul Uloom Al-Hashimiyyah Arabic College> Nawalapitiya

- Al Aalim Al Faazil N.M. Silmy (Noori, Saahdhi)
Usthaz Rawlathul Jannah Arabic College (Muthur)

- Ash Shaikh Moosa Kaleem Naleemi
(SLTS, BA, Dip in Edu, M.Ed)

– பயிற்சி வகுப்புக்கள் நடைபெறும் காலம்: 26–27, ஒக்டோபர் (சனி – ஞாயிறு)

**இடம்:**
ரத்மலானை

**சேவைக் கட்டணம்: 1000/-**

தங்குமிட வசதி செய்து தரப்பட மாட்டாது. பங்கு பற்றுவோர் தமது மத்ரசாவிலிருந்து அல்லது வீட்டில் இருந்து வந்து போக வேண்டும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இணைந்து கொள்ள விரும்புகின்றவர்கள்
– உங்கள் பெயர்
– கல்வி கற்கும் தரம்
– கற்கும் அறபுக் கல்லூரியின் பெயர்
– உங்கள் சுய முகவரி

ஆகியவற்றை 0778852767 எனும் what's app இலக்கத்திற்கு 04/10/2024 ஆந் திகதிக்கு முன் அனுப்புமாறு வேண்டிக் கொள்கின்றோம்.

**ஏற்பாடு**
A.B.M. **அஷ்ரப் நழீமி** (SLAS)
ஸ்தாபக தலைவர் –
இலங்கை அறபு எழுத்தணி கலைச் சங்கம் மற்றும் முன்னாள் பணிப்பாளர் – முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்ல்கள் திணைக்களம்
ARABIC CALLIGRAPHY ASSOCIATION OF SRI LANKA – ACAS



# இஸ்ரேல் மீதான ஈரானின் தாக்குதல்; சர்வதேச போர் மூளும் அபாயம்!





எஸ்.ஏ. சுஃப்யான்
(Senior Journalist, Chennai - Tamilnadu, India)

லெபனான் நாட்டில் இருந்து செயல்படும் ஹிஸ்புல்லாஹ் அமைப்பு கடந்த மூன்று தசாப்தங்களுக்கும் மேலாக, இஸ்ரேலின் சிம்ம சொப்பனமாக இருந்து வருகிறது.இந்த நிலையில் ஹிஸ்புல்லாஹ் அமைப்பின் தலைவர் ஹசன் நஸ்ருல்லாஹ் இஸ்ரேலிய ராணுவம் நடத்திய குண்டு வீச்சு தாக்குதலின் போது செப்டம்பர் மாதம் 28 ந் தேதி படுகொலை செய்யப்பட்டார். இந் நிலையில் லெபனானில் மிகுந்த பதட்டம் நிலவுகிறது. இதுவரையில் 1 மில்லியன் மக்கள் வேறு பாகங்களுக்கு இடம் பெற்றுள்ளது என்பது மிகைப்படுத்த முடியாத செய்தியாக அமைந்துள்ளது.

இஸ்ரேலின் சத்திய எதிரியாக இருந்த ஈரான் ஆதரவு இயக்கத்திற்கு அவர் தலைமை தாங்கினார். மேலும் வான்வழித் தாக்குதலில் தெற்கு லெபனானில் குழுவின் உயர்மட்டத் தளபதி அலி கராகேயும் கொல்லப்பட்டார் என்று ஹிஸ்புல்லா அமைப்பு தெரிவித்தது. இஸ்ரேலிய மற்றும் அமெரிக்க கூட்டு ராணுவம் நடத்திய தாக்குதலில் மொத்தம் 18 பேர் படுகொலை செய்யப்பட்டார்கள்.

அதே சமயம் எல்லை மீறிய நிலையில் இஸ்ரேலிய அரசின் உத்தரவின் பேரில் அந்நாட்டின் வான் பாதுகாப்பு படையினர் நவீன ரக சாதனங்களை கொண்டு அப்பாவி பொதுமக்கள் குழந்தைகளை கொல்வது வாடிககையான ஒன்றாக மாறி உள்ளது குறிப்பிடத்தக்கது.

இந்த நிலையில் தான் 27 செப்டம்பர் வெள்ளிக்கிழமை மாலை நடந்த தாக்குதலில் தெற்கு பெய்ரூட்டில் பல குடியிருப்பு கட்டிடங்களை தரைமட்டமாக்கியது.

இந்த நிலையில் ஹிஸ்புல்லாஹ் அமைப்பின் தலைவர் ஹஸன் நஸ்ருல்லாஹ் இஸ்ரேலிய ராணுவம் தாக்குதலில் படுகொலை செய்யப்பட்ட நிலையில் உலகம் முழுவதும் இந்த செய்தி பரபரப்பான சூழலை உருவாக்கியது.

இதற்கிடையில் கடந்த 2006 ஆம் ஆண்டு முதல், ஹிஸ்புல்லாஹ் அமைப்பின் தலைவர் ஹசன் நஸ்ரல்லாஹ்வை பொதுவெளியில் காண்பது மிகவும் அரிதாகவே இருந்தது. முன்னாள் ஹிஸ்புல்லாஹ் அமைப்பின் தலைவர் அப்பாஸ் மஸாவி இஸ்ரேலிய ராணுவ தாக்குதலில் படுகொலை செய்யப்பட்ட நிலையில் 1992 ஆம் ஆண்டு முதல் ஹிஸ்புல்லாஹ்வை நஸ்ருல்லாஹ் வழிநடத்தினார்.

இஸ்ரேல் நாட்டின் ராணுவ தாக்குதலுக்கு பதிலளிக்கும் விதமாக, ஹிஸ்புல்லாஹ் இஸ்ரேலுக்கு எதிரான போராட்டத்தில் அதன் உறுதிப்பாட்டை வலியுறுத்தியது. களத்தில் அதன் ராணுவ வீரர்கள் வலிமையாக போரிடும் வகையில் அதன் கட்டமைப்பை வலுவான முறையில் கட்டமைப்பு செய்ததில் ஹஸன் நஸ்ருல்லாஹ் வின் பங்கை யாரும் மறுக்க முடியாது. இந்நிலையில் இஸ்ரேலிய ராணுவம் தாக்குதலில் இருந்து லெபனானைப் பாதுகாப்பதற்கும் காசாவிற்கு ஆதரவளிப்பதற்கும் ஹிஸ்புல்லாஹ் அமைப்பு உறுதியளித்தது.

இந்த நிலையில் இஸ்ரேலிய பிரதம மந்திரி பெஞ்சமின் நெதன்யாகு இந்த நடவடிக்கையை கொண்டாடினார், ”எண்ணற்ற இஸ்ரேலியர்கள் மற்றும் பல நாடுகளின் குடிமக்கள் கொல்லப்பட்டதற்கு காரணமான ஒருவருடன் நாங்கள் கணக்கை தீர்த்தோம்” என்று அவர் கூறினார். இஸ்ரேலிய பாதுகாப்புக்கு நஸ்ரல்லாஹ் தொடர்ச்சியான அச்சுறுத்தலை ஏற்படுத்தியதாக பெஞ்சமின் நிதான்யாகு கூறினார்.

இதற்கிடையில் கடந்த செவ்வாய்க்கிழமை இரவு இஸ்ரேலை நோக்கி ஈரான் பெரும் எண்ணிக்கையில் ஏவுகணைகளை ஏவி தாக்குதல் நடத்தியது.

இந்த ஆண்டில் இஸ்ரேல் மீது ஈரான் நடத்தும் இரண்டாவது தாக்குதல் இதுவாகும். ஏப்ரல் மாதத்திலும் ஈரான் டிரோன்கள் மற்றும் ஏவுகணைகள் மூலம் இஸ்ரேலை தாக்கியது.

ஈரானின் இந்த தாக்குதல் தற்போது நின்றுள்ளதாகவும், தற்போதைக்கு எந்த ஆபத்தும் இல்லை என்றும் இஸ்ரேல் ராணுவ அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

கடந்த செவ்வாய்கிழமை இரவு ஈரான் 181 பாலிஸ்டிக் ஏவுகணைகளை வீசியதாகவும், அதில் ஒரு பாலத்தீனர் உயிரிழந்ததாகவும் இஸ்ரேல் வெளியுறவு அமைச்சகம் எக்ஸ் பக்கத்தில் பதிவிட்டுள்ளது. இது தொடர்பான காணொளியையும் இஸ்ரேல் வெளியிட்டுள்ளது, அதில் ஒருவர் சாலையில் நடந்து செல்லும்போது தாக்குதலுக்கு உள்ளானது பதிவாகியுள்ளது. இந்த வீடியோ இஸ்ரேலால் ஆக்கிரமிக்கப்பட்ட மேற்குக் கரையில் இருந்து எடுக்கப்பட்டதாக கூறப்படுகிறது. இஸ்ரேலின் முக்கிய நகரமான டெல் அவிவின் வடக்கே ஈரான் ஏவுகணைகள் நடத்திய தாக்குதலில் சாலையில் 8 முதல் 10 மீட்டர் ஆழத்தில் பெரிய பள்ளம் ஏற்பட்டது.

இந்த தாக்குதலின் போது ஈரான் மிகவும் வலிமையான பாலிஸ்டிக் ஏவுகணைகளை தொடர்ந்து ஏவியதன் விளைவாக இஸ்ரேலிய நாடு முழுவதும் திணறி போனது என்பதே யதார்த்தமான உண்மையாகும். வரலாற்றில் இஸ்ரேலிய நாடு இது போன்ற ஒரு தாக்குதலை சந்தித்ததே இல்லை என்று இஸ்ரேலிய டைம்ஸ் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

உலகின் மனித சமூகத்தின் மரபுகளில் எல்லா நிலைகளுக்கும் ஒரு எல்லை வரையறை உள்ள நிலையில் இஸ்ரேலிய அரசும் அதன் ராணுவமும் எல்லா வரம்புகளையும் மீறி விட்டது என்பதே இன்றைய நிலையாக இருக்கிறது. கடந்த ஒரு ஆண்டுகளாக பாலஸ்தீன மக்களை இஸ்ரேலிய ராணுவம் தொடர்ந்து படுகொலை செய்து வந்துள்ளது.

இஸ்ரேலிய ராணுவத்தின் இன கருவறுத்தல் காரணமாக 42 ஆயிரம் அப்பாவி பொதுமக்கள் குழந்தைகள் படுகொலை செய்யப்பட்டு உள்ள நிலையில் இன்று வரை இஸ்ரேலிய ராணுவமும் அதன் தலை சிறந்த கூட்டாளியான அமேரிக்காவும் எந்தவொரு வரம்பு நிலைகளுக்கும் உட்படாமல் தான் இந்த தாக்குதலை நடத்தி வந்தனர்.

அதேநேரத்தில் லெபனான் நாட்டில் பொதுமக்கள் மற்றும் ஹிஸ்புல்லாஹ் அமைப்பின் தலைவர்களை குறி வைத்து அவர்கள் பயன்படுத்தி வந்த பேஜர் கையடக்க கருவியில் உட்பகுதியில் வெடித்து சிதறும் வகையில் டி என் ஈ பி வெடி மருந்துகளை வைத்து தந்திரமான நடவடிக்கைகள் மூலம் வெடிக்க செய்ததன் விளைவாக 4,000 பேர் கடுமையாக பாதிக்கப்பட்ட நிலையில் 39 பேர் பலியானார்கள்.

அதோடு நில்லாமல் 20 க்கு மேற்பட்ட ஹிஸ்புல்லாஹ் அமைப்பின் தலைவர்களை படுகொலை செய்து தங்களின் வீர தீர தந்திரங்களை சர்வதேச நாடுகள் மத்தியில் பிரகடனம் செய்து தன்னை அழிப்பதற்கு இந்த பூமியில் யாரும் இல்லை என்று மார்தட்டிக் கொண்ட நிலையில் தான் ஈரான் நாட்டில் இருந்து ஒரே நேரத்தில் 181 பாலி ஸ்டிக் ராட்சத ஏவுகணைகளை ஏவி இஸ்ரேல் அரசை நிலை குனிய செய்து விட்டது என்பதே இன்றைய நிலையாக உள்ளது.

இருப்பினும் இந்த தாக்குதல் மூலம் தெற்காசிய பிராந்தியத்தில் ஈரான் தான் யார் என்பதை நிருபித்து உள்ளதாக சர்வதேச முகாமையாளர்கள் கருத்து தெரிவித்து வருகின்றனர். இந்த தாக்குதலின் விளைவாக இஸ்ரேல் நாட்டில் பலர் படுகொலை செய்யப்பட்டார்கள். மொசாத் உளவு அமைப்பின் தலைமையகம் சேதாரம் அடைந்தது. விமான தளங்கள் மற்றும் 20 க்கு மேற்பட்ட எஃப் 35 விமானங்கள் மற்றும் விமான தளங்கள் பெரும் அழிவை சந்தித்து உள்ளது. அதேநேரத்தில் இஸ்ரேலிய ராணுவம் நிலைகள் பல தகர்க்கப்பட்டது . இந்த தாக்குதலில் சேதம் அடைந்துள்ள ராணுவ நிலைகள் மற்றும் விமான தளங்கள் மறு கட்டமைப்பு செய்ய வேண்டிய சிக்கலில் இஸ்ரேல் நாடு இருந்து வருகிறது. ஆனாலும் யூத ராணுவம் இதனைத் தொடர்ந்து மறுத்து வருகின்றது இருப்பினும் தங்களுக்கு ஏற்பட்டுள்ள தாக்குதலுக்கு பழி வாங்கியே தீருவேன் என்று சப்தமிட்டு சபதம் செய்து வருவதை காண முடிகிறது.

அதே நேரத்தில் ஈரான் ராணுவம் முதல் முறையாக ஹைப்பர்சோனிக் ஏவுகணைகளைப் பயன்படுத்தியது என்றும் 90 சதவிகித எறிகணைகள் ஏவுகணைகள் ஃ டிரோன்கள் தாக்குதல் மூலம் இலக்கை துல்லியமாக தாக்கின என்றும் இரானின் இஸ்லாமிய புரட்சி பாதுகாப்பு படை (ஐஆர்ஜிசி) கூறுகிறது. இதனை குறித்து தகவல் வெளியிட்ட ஈரான் அரசு தாங்கள் நடத்திய தாக்குதலில் மூன்று இஸ்ரேலிய ராணுவ தளங்கள் தாக்கப்பட்டதை ஐசுபுஊ ஈரானிய புரட்சிகர இஸ்லாமிய ராணுவம் உறுதி செய்துள்ளது குறிப்பிடத்தக்கது. ஆனால், இரானால் ஏவப்பட்ட ஏவுகணைகளில், ‘பெரும்பாலானவை’ அழிக்கப்பட்டதாக இஸ்ரேலிய ராணுவம் தெரிவித்துள்ளது.

தங்கள் அமைப்பின் உயர் தளபதி மற்றும் இரான் ஆதரவு ஆயுதக் குழுக்களின் தலைவர்கள் கொல்லப்பட்டதற்கு பதிலடியாகவே தங்கள் அரச ராணுவம் இது போன்ற தாக்குதலை யூத ராணுவ நிலைகள் மீது நடத்தியதாக ஈரானின் இஸ்லாமிய புரட்சி பாதுகாப்பு படை ஒரு அறிக்கையில் தெரிவித்தது.

அதேநேரத்தில் ஹிஸ்புல்லாஹ் அமைப்பின் தலைவர் ஹசன் நஸ்ருல்லாஹ் மற்றும் ஐஆர்ஜிசி தளபதி அப்பாஸ் நில்ஃபோரோஷன், ஹமாஸ் இயக்கத்தின் அரசியல் பிரிவு தலைவர் இஸ்மாயில் ஹனியா ஆகியோரை இஸ்ரேலிய ராணுவம் படுகொலை செய்ததற்கு பழி வாங்கும் நடவடிக்கையாகவே இந்த தாக்குதலை ஈரான் நடத்தியதாக செய்திகள் வெளியாகியுள்ளன. அதே நேரத்தில் நாட்டின் அதிஉயர் தலைவரான ஆயத்துல்லா அலி காமனெயி தனிப்பட்ட முறையில் இந்த தாக்குதல்களுக்கு உத்தரவிட்டார் என்று மூத்த இரானிய அதிகாரி ராய்ட்டர்ஸ் செய்தி முகமையிடம் கூறினார்.இந்த இரண்டு சக்திகளுக்கும் இடையே நீண்டகாலமாக நடந்து வரும் மறைமுகப்போரில் பதற்றம் அதிகரித்திருப்பதை இந்த தாக்குதல்கள் சுட்டிக்காட்டுகின்றன. உண்மையில் இஸ்ரேலின் இருப்பையே ஈரான் ன் அங்கீகரிக்கவில்லை. ஈரானின் ராணுவக் கொள்கையில் இஸ்ரேல் மையமாக உள்ளது. மறுபுறம் இஸ்ரேல், ஈரானை தனது இருப்புக்கு அச்சுறுத்தலாகக் கருதுகிறது. அதற்கு எதிராக பல ஆண்டுகளாக மறைமுகப்போரை நடத்தி வருகிறது.

தற்போதைய நிலையில் மத்திய கிழக்கு நாடுகளில் போர் பதட்டம் ஆரம்பித்து விட்டது என்பதை தாண்டி போர் முழு வீச்சில் போர் தொடங்கி விட்டது என்பதே உண்மையாகும். இந்த நிலையில் இஸ்ரேலிய ராணுவம் லெபனான் தெற்கு பகுதியில் நுழைந்து தரைவழி போரைத் தொடங்கியது. இந்த தரை வழி போரினுடாக ஹிஸ்புல்லாஹ் அமைப்பின் போராளிகளை சமாளிக்க முடியாமல் இஸ்ரேலிய ராணுவம் மிகப் பெரிய அளவில் ஆன உயிர் இழப்புகளை சந்தித்த நிலையில் போரை நிறுத்தியது. அதேநேரத்தில் இஸ்ரேலிய ராணுவம் தன்னிடம் இருக்கும் எஃப் 35 ஏர் கிராஃப்ட் மூலம் லெபனானில் குண்டுகளை வீசி பொது மக்களை படுகொலை செய்து வரும் நிலையில் இது செயல்கள் மூலம் சர்வதேச நாடுகள் மத்தியில் மிகப் பெரிய அளவில் ஆன பதட்டம் நிலவுகிறது.

லெபனான் தலை நகரான பெய்ரூட், காசா மற்றும் வெஸ்ட் பேங்கில் கொடூரத் தாக்குதலை இஸ்ரேல் ராணுவம் தீவிரப்படுத்த தொடங்கியுள்ளது. இந்நிலையில், கடந்த 24 மணி நேரத்தில் நாடு முழுவதும் நடந்த குண்டுவெடிப்புத் தாக்குதல்களில் 37 பேர் கொல்லப்பட்டதாகவும், 151 பேர் காயமடைந்ததாகவும் லெபனான் சுகாதார அமைச்சகம் தெரிவித்துள்ளது.

இதனிடையெ, இஸ்ரேல் தாக்குதலில் லெபனானில், கடந்த ஆறு வாரங்களில் 690 குழந்தைகள் காயமடைந்துள்ளனர் என யுனிசெப் தெரிவித்துள்ளது. இந்நிலையில், ஈரானின் வெளியுறவுத் துறை அமைச்சர் லெபனானுக்கு பயணம் மேற்கொண்டுள்ளார். இஸ்ரேலிய தாக்குதலை “விதி மீறல் செயல்” என்றும் அவர் குற்றம்சாட்டியுள்ளார்.

இஸ்ரேல் மீதான ஈரான் தாக்குதலுக்குப் பிறகுப் ஈரான்

தொடர்ச்சி 8ம் பக்கம் பார்க்க...

## இஸ்ரேல்...
(7ம் பக்கத் தொடர்ச்சி)

உயர் தலைவரும், இஸ்லாமிய மதகுருவுமான அயதுல்லா அலி காமனி, வெள்ளிக்கிழமை தொழுகைக்கு பிறகு பெருநிறுவன ஈரானிய மக்களிடம் உரையாற்றினார். அப்போது அவர் கூறுகையில், "பிரிவினை என்ற விதையை விதைத்து, அனைத்து முஸ்லிம்களுக்கும் இடையே பாகுபாட்டை ஏற்படுத்துவதுதான் நமது எதிரியின் முதல் வேலை. ஹிஸ்புல்லா மற்றும் ஹமாஸை இஸ்ரேலால் ஒருபோதும் வெற்றி கொள்ள முடியாது. இந்த பிராந்தியத்தில் இருந்து மேற்கு நாடுகளுக்கு எரிசக்தியை ஏற்றுமதி செய்வதற்கான நுழைவாயிலாக இஸ்ரேலை மாற்றும் நோக்கிலேயே அமெரிக்காவும் அதன் நட்பு நாடுகளும் அதற்கு பாதுகாப்பை வழங்கி வருகின்றன. ஆனால், நமது பிராந்தியத்தின் எதிர்ப்பு சக்தி, இஸ்ரேலுக்கு எதிராக பின்வாங்காது.

அனைத்து முஸ்லிம் நாடுகளும் பாதுகாப்புக்காக ஒன்றுபட வேண்டும். ஆப்கானிஸ்தானில் இருந்து ஏமன் வரை, ஈரானில் இருந்து காசா மற்றும் லெபனான் வரை முஸ்லிம் நாடுகள் தற்காப்புக்காக தயாராக வேண்டும். இஸ்ரேலை எதிர்கொள்வதில் ஈரான் தாமதம் செய்யாது அவர்கள் பாலஸ்தீனர்களுக்கும், லெபனானியர்களுக்கும், எகிப்தியர்களுக்கும், ஈரானியர்களுக்கும், ஏமன் மற்றும் சிரியா நாட்டின் மக்களுக்கும் எதிரிகள்தான். ஒவ்வொரு நாட்டிற்கும், அதில் வாழும் ஒவ்வொரு மக்களுக்கும் இறுதி கொடுங்கோன்மைக்கு எதிராக தங்களை தற்காத்துக் கொள்ள உரிமை உள்ளது" என்று அழுத்தமாக தெரிவித்துள்ளார்.

இந்த பேச்சின் ஊடாக ஈரான் உயர்மட்ட தலைவர் செய்யத் அலி கொமெய்னி யின் கருத்து ஒட்டுமொத்த முஸ்லிம்களை செவியுறச் செய்துள்ளது குறிப்பிடத்தக்கது. அதேநேரத்தில் ஈரான் உயர் மட்ட தலைவர் செய்யத் அலி கொமேனி பதுங்கு குழிகளில் மறைந்து வாழ்வதாக வந்த செய்தியை முற்றிலுமாக மறுக்கும் வகையில் தான் அவர் பொதுமக்களை சந்தித்து வெள்ளிக்கிழமை தொழுகைக்கு பிறகு உரையாற்றினார் என்பதை நாம் கவனத்தில் எடுத்துக் கொள்ள வேண்டும். இந்த உரையின் மூலம் மேற்கத்திய நாடுகள் மற்றும் அமெரிக்க, இஸ்ரேலிய தேசங்களுக்கு அவர்கள் புரிந்து கொள்ளும் வகையில் அவர் தெளிவான செய்தியை கூறியுள்ளதாக அறிந்து கொள்ள முடிகிறது.

இஸ்ரேல் அரசின் தலைவர் பெஞ்சமின் நிதான்யாகு மற்றும் யூத சியோனிச கூட்டாளிகள் எல்லா வகையிலும் மனித உரிமைகள் மற்றும் அது சார்ந்த என எல்லைகளை மீறி நிலையில் தொடர்ந்து படுகொலைகளை அரங்கேற்றம் செய்து வரும் நிலையில் இதற்கான தீர்வுகளை எடுக்க வேண்டிய நிலையில் சர்வதேச நாடுகள் மவுனம் காத்து வருவதை நாம் காண கூடியதாக இருக்கிறது.

உண்மையில் இது போன்ற ஒரு சூழலில் இஸ்லாமிய தேசங்கள் அனைத்தும் குறிப்பாக சவூதி அரேபியா, ஜோர்டான், ஈராக், எகிப்து, ஈரான், துருக்கி, சிரியா , ஆப்கானிஸ்தான் மற்றும் ஏமன் ஆகிய நாடுகள் ஒரே குடையின் கீழ் வந்து இஸ்ரேலிய நாட்டின் அடக்கு முறைக்கு எதிராக வலுவான நடவடிக்கைகளை நாங்கள் மேற்கொள்ள போகிறோம் என்று கூட்டாக அறிக்கை விட்ட மாத்திரத்தில் இது போன்ற பிரச்சனைகளுக்கு உடனடியாக தீர்வு ஏற்படும் என்பதில் எந்த ஐயமும் இல்லை.

ஆனால், இஸ்லாமிய நாடுகள் மத்தியில் எந்தவொரு ஒற்றுமையும் இல்லாமல் அவர்கள் தனித்து விடப்பட்ட நிலையில் மேற்கத்திய நாடுகளின் சார்பு நிலைகளைக் மேற்கொண்டு வருவதைக் காண கூடியதாக இருக்கிறது. அதேநேரத்தில் ஈரான் தற்போது அது போன்ற ஒரு நல்ல செய்தி வராதா என்று தான் எதிர் பார்த்து காத்து கொண்டு இருப்பதை நாம் அவதானிக்க முடிகின்றது. ஆனால் பூனைக்கு மணி கட்டுவது யார் என்பதே கேள்வியாக உள்ளது.

இஸ்லாமிய நாடுகள் தாமதிக்கும் ஒவ்வொரு நாளும் மனித சமூகத்திற்கு ஏற்பட்ட ஆபத்தான சூழல்கள் தொடரும். அது போன்ற ஒரு சூழலில் தான் காசா மற்றும் லெபனானில் வாழும் மக்கள் தினமும் செத்து, செத்து மடிந்து கொண்டு இருப்பதை நாம் காண முடிகிறது.

இறைவன் இந்த அதிகாரத்தையும், செழிப்பான வாழ்க்கையும் ஒரு சிலருக்கே பரிசாக அளித்து ஒரு குறிப்பிட்ட காலம் இந்த பூமியில் வாழும் படி அனுமதி அளித்துள்ளான் என்பதில் நம் யாருக்கும் சந்தேகம் இல்லை. ஆனால், இந்த பூமியில் வாழும் நாம் அனைவரும் ஒரு நாள் இறைவனை சந்தித்தே ஆக வேண்டும் என்பதில் பெரும்பாலான மக்களுக்கு அழுத்தம் திருத்தமான நம்பிக்கை உள்ளது. தாங்கள் தான் முழுமையான நம்பிக்கையாளர்கள் என்று இந்த பூமியில் பெருமை பாராட்டி எந்தவொரு பலனும் இல்லை. ஒவ்வொரு தனி மனிதனுக்கும் இறைவன் வழங்கிய அருட்கொடைகள் குறித்து கேள்விகள் எழுப்பப்படும். அதில் இருந்து யாரும் தப்பி விட முடியாது. ஒரு வேளை இந்த உலகத்தில் உள்ள நீதிமன்றங்கள் நீதி வழங்குவதில் தவறும் பட்சத்தில் இறைவனின் நீதி மன்றத்தில் எந்த நிலையிலும் தப்பி விட வாய்ப்பே இல்லை என்று ஈரான் கூறியதை நாம் இந்த தருணத்தில் நினைவு கொள்வதே சாலச் சிறந்தது என்பது தான் யதார்த்தமான உண்மையாகும்...!

# அமானா வங்கி மற்றும் IBSL இணைந்து வங்கியியல் மாணவர்களுக்கு வழங்கும் பிரயோக அனுபவம்




இலங்கை வங்கியியலாளர் நிர்வகத்துடன் அமானா வங்கி ஏற்படுத்தியுள்ள பங்காண்மை தொடர்பில் அறிவித்துள்ளது. இந்தப் பங்காண்மையினூடாக, IBSL மாணவர்களுக்கு பெறுமதி வாய்ந்த தொழிற்பயிற்சி வாய்ப்புகளை பெற்றுக் கொடுப்பதற்கு முன்வந்துள்ளது. இலங்கையின் எதிர்கால வங்கியியல் நிபுணர்களுக்கான நிபுணத்துவ அபிவிருத்தி வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுக்கவும், பிரயோக அனுபவத்தை மேம்படுத்தவும் முன்வந்துள்ளது. இந்த உடன்படிக்கையில் அமானா வங்கியின் முகாமைத்துவ பணிப்பாளர்/ பிரதம நிறைவேற்று அதிகாரி மொஹமட் அஸ்மீர் மற்றும் IBSL பணிப்பாளர் நாயகம் சி.பி.ஏ. கருணாதிலக ஆகியோர் கைச்சாத்திட்டிருந்தனர்.

அமானா வங்கியின் முகாமைத்துவ பணிப்பாளர்ஃ பிரதம நிறைவேற்று அதிகாரி மொஹமட் அஸ்மீர் கருத்துத் தெரிவிக்கையில், "IBSL உடன் கைகோர்த்து மாணவர்களுக்கு தொழிற்பயிற்சிக்கான வாய்ப்புகளை ஏற்படுத்திக் கொடுக்க முன்வந்துள்ளதையிட்டு மகிழ்ச்சியடைகின்றோம். உயர் திறன் படைத்த வங்கியியல் ஊழியர்களையும், இஸ்லாமிய வங்கியியல் அறிவையும் செயற்பாடுகளையும் இலங்கையில் முன்னேற்றுவதற்கு நாம் கொண்டுள்ள அர்ப்பணிப்பை இந்த நடவடிக்கை பிரதிபலிப்பதாக அமைந்துள்ளது. தொழிற்துறையின் முன்னேற்றத்துக்கு இந்த கைகோர்ப்பு முக்கிய பங்காற்றும் என்பதில் நாம் நம்பிக்கை கொண்டுள்ளதுடன், வங்கியியல் துறையின் உறுதியான மற்றும் அறிவார்ந்த செயற்பாடுகளுக்கு எமது ஆதரவையும் வெளிப்படுத்துவதாக அமைந்துள்ளது." என்றார்.

ஐடீளுடு இன் பணிப்பாளர் நாயகம் சி.பி.ஏ. கருணாதிலக இந்தக் கைகோர்ப்பு தொடர்பில் கருத்துத் தெரிவிக்கையில், "வங்கியியல் மற்றும் நிதியியல் துறையில் காணப்படும் தனிநபர்களின் நிபுணத்துவ ஆற்றலை மேம்படுத்துவதற்கு அமானா வங்கியுடன் ஏற்படுத்திக் கொண்டுள்ள பங்காண்மை மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த மைல்கல்லாக அமைந்துள்ளது. இந்த தொழில்பயிற்சி வாய்ப்புகளின் அறிமுகம் என்பது, உயர் தரம் வாய்ந்த கல்வி மற்றும் பயிற்சியை பெற்றுக் கொடுப்பதற்கான எமது அர்ப்பணிப்பின் எடுத்துக்காட்டாகும். பங்குபற்றுநர்களுக்கு நிதிசார் கட்டமைப்பில் மேம்படுவதற்கு இந்த தொழிற்பயிற்சி வாய்ப்புகள் உதவியாக அமையும் என்பதில் நான் நம்பிக்கை கொண்டுள்ளேன். உலகளாவிய ரீதியில் விரிவாக்கமடைந்து வரும் வட்டியில்லாத வங்கியியல் கட்டமைப்பில் வெளிப்பாட்டை கொண்டிருக்க எதிர்பார்ப்போருக்கு அமானா வங்கியின் நிபுணத்துவம் பெறுமதி வாய்ந்த வாய்ப்பாக அமைந்திருக்கும். வங்கியியல் துறையில் உயர்ந்த தொழில் வாய்ப்புகளை பெற்றுக் கொள்ள ஏதுவாக அமையும்." என்றார்.

அமானா வங்கியின் நிபுணத்துவத்துடன் கைகோர்த்து IBSL இனால் அண்மையில் இஸ்லாமிய வங்கியியல் டிப்ளோமா அறிமுகம் செய்யப்பட்டிருந்தது. அதனூடாக மாணவர்களுக்கு களத்திலுள்ள நிபுணர்களுடன் இணைந்து நேரடியாக பயில்வதற்கான வாய்ப்பை மாணவர்களுக்கு வழங்கியிருந்தது.

இலங்கை வங்கியாளர்கள் நிறுவகம் (IBSL) வங்கியியல் மற்றும் நிதியியல் துறையில் கல்விசார் மற்றும் நிபுணத்துவ தகைமைகளை பெற்றுக் கொடுப்பதற்காக தம்மை அர்ப்பணித்த நிறுவகமாக அமைந்துள்ளது. தனிநபர்களுக்கு வங்கியியல் துறையில் நிபுணத்துவம் மற்றும் ஆற்றல்களை மேம்படுத்திக் கொள்வதற்கான வாய்ப்புகளை பெற்றுக் கொடுப்பதாகவும் அமைந்துள்ளது.

இலங்கை மத்திய வங்கியின் அனுமதி பெற்று இயங்கும் நிதிச் சேவைகளை வழங்கும் நிறுவனமாகவும் கொழும்பு பங்குப் பரிவர்த்தனையில் பட்டியலிடப்பட்ட நிறுவனமாகவும் அமானா வங்கி பிஎல்சி திகழ்கின்றது. ஜித்தாவை தளமாகக் கொண்டியங்கும் ஐளனுடீ குரூப் பிரதான பங்காளராக திகழ்கின்றது. IsDB குரூப் 'AAA' தரப்படுத்தலை தன்வசம் கொண்டுள்ள பல்தேசிய அபிவிருத்தி நிதிச் சேவைகளை வழங்கும் நிறுவனமாக திகழ்வதுடன், 57 நாடுகளில் அங்கத்துவத்தைக் கொண்டுள்ளது. வட்டிசாராத வங்கியியல் மாதிரியை கொண்டுள்ள அமானா வங்கியை, உலகின் உறுதியான 50 இஸ்லாமிய வங்கிகளில் ஒன்றாக தரப்படுத்தப்பட்டிருந்ததுடன், 2023 ஆம் ஆண்டில் 37ஆம் ஸ்தானத்தில் ஏசியன் பாங்கர் தரப்படுத்தி கௌரவித்துள்ளது.

அமானா வங்கி எவ்விதமான துணை அல்லது இணை நிறுவனங்கள் எதனையும் கொண்டிருக்கவில்லை என்பதுடன், அநாதரவான சிறுவர்கள் காப்பக அமைப்பான OrphanCare நம்பிக்கை நிதியத்தின் ஸ்தாபக அனுசரணையாளராக தனது ஈடுபாட்டை பேணி வருகின்றது.

தேசிய பத்திரிகையாக (மின்னிதழ்) வெளிவருகின்ற **"உதயம்"** பத்திரிகைக்கு தங்களின் பேராதரவை எதிர்பார்ப்பதுடன் கீழுள்ள QR ஐ Scan செய்வதனூடாக எமது வட்ஸ்அப் குழுமத்தில் இணைந்து ஒவ்வொரு வெளியீட்டின் பிரதிகளையும் இலவசமாக பார்வையிடலாம்...

# ஆட்சியைக் கைப்பற்ற கட்சிகள் வியூகம்!

## தே.ம.சக்திக்கே அதிக வாய்ப்பு





எம்.எஸ். அமீர் ஹுசைன்

நடந்து முடிந்த ஜனாதிபதித் தேர்தலில் ஜே.வி.பி. தவிர்ந்த ஏனைய பிரதான கட்சிகளுக்கு ஏற்பட்ட பின்னடைவைத் தொடர்ந்து எதிர்வரும் நவம்பர் மாதம் 14 ஆம் திகதி நடைபெற இருக்கின்ற பொதுத் தேர்தலை எவ்வாறு சந்திப்பது என்ற விடயத்தில் பிரதான அரசியல் கட்சிகளான சமகி ஜனபலவேகய, ரனில் விக்கிரமசிங்கா தலைமையிலான கூட்டணி, பொதுஜன பெரமுன கட்சி மற்றும் ஸ்ரீ.ல.சு. கட்சி உட்பட முக்கியமான அரசியல் கட்சிகளுக்குள் நெருக்கடி நிலை உருவாகி இருக்கின்றது. ஏற்கனவே ஜனாதிபதித் தேர்தலில் ஆட்சி மாற்றம் ஏற்பட்டிருப்பதால் எப்படியாவது பாராளுமன்ற அதிகாரத்தையாவது தக்கவைத்து ஆட்சியை பிடிக்க வேண்டும் என்ற முயற்சியில் கட்சிகள் வியூகங்களை வகுப்பதில் ஈடுபட்டுள்ளன.

பலமான கூட்டணி அமையாவிட்டால் இந்த தேர்தலில் 113 ஆசனங்களுக்கு மேல் பலத்தை பெற்று அநுரகுமார திசாநாயக்காக தலைமையிலான ஜே.வி.பி. யின் மறு வடிவமான தேசிய மக்கள் சக்தி ஆட்சி அமைப்பதில் சந்தேகம் இல்லை. மூன்றில் இரண்டு பெரும்பான்மை எப்படிப்போனாலும் கிடைத்துள்ள சந்தர்ப்பத்தில் அதிகாரத்தை கைப்பற்றி நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி நிர்வாகத் துடன் பாராளுமன்ற அதிகாரத்தையும் கைப்பற்றினால் அது இலங்கையின் அரசியல் வரலாற்றில் புதிய அத்தியாத்தை எழுதுவதாக அமையும். அதற்காக எந்தவிதமான கூட்டணியும் இல்லாமல் தனி ஒரு அரசியல் கட்சியாக ஜே.வி.பி. முன்னே வைத்த காலை மேலும் நம்பிக்கையோடு நகர்த்த தயாராகி இருக்கின்றது. ஆனாலும் நடந்து முடிந்த ஜனாதிபதித் தேர்தலில் தமக்கே மக்கள் ஆணை வழங்கி ஆட்சி அமைக்கும் சந்தர்ப்பத்தை வழங்குவார்கள் என்று எதிர்பார்த்த சஜித் பிரேமதாசா தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்தியான சமகி ஜனபலவேகய கட்சி எப்படியான அனுகுமுறையை பின்பற்றினால் இழந்த செல்வாக்கை மீண்டும் கட்டியெழுப்பலாம் என்று சிந்தித்த வண்ணம் இருக்கின்றது. குறிப்பாக கடந்த வாரம் அது தொடர்பாக பல சந்திப்புக்களையும் மந்திராலோசனைகளையும் நடத்திய போதும் உரிய பலன் கிடைக்கவில்லை என்றே கூறலாம்.

பிரதான கட்சியாக முன்னைய பொதுஜன பெரமுன கட்சியில் இருந்து ராஜபக்ஷ குடும்பத்தை விட்டு வெளியேறி வந்து ரனில் விக்கிரமசிங்காவுடன் இணைந்து அவரது வெற்றிக்காக பாடுபட்ட அனைத்து முன்னைய பாராளுமன்ற உறப்பி னர்களும் மீண்டும் அதே ரனில் விக்கிரமசிங்கா தலைமையில் ஒன்று சேர்ந்து பொதுத் தேர்தலை சந்திக்க தயாராகி வருகின்றனர். அதற்கான பேச்சுவார்த்தைகள் 2024.10.03 ஆம் திகதி நடைபெற்று ஒருவாறு இணக்கப்பாடு எட்டப்பட்டிருக்கின்றது. ஏற்கனவே அரசியலில் இருந்து ஒருங்குவேன், இனிமேல் எந்த தேர்தலிலும் போட்டியிட மாட்டேன் என்று அறிவித்திருந்த முன்னாள் ஜனாதிபதி ரனில் விக்கிரமசிங்கா மீண்டும் பொதுத் தேர்தல் தொடாட்பான பேச்சுவார்த்தைகளுக்கு தலைமைதாங்கி நடத்தி உள்ளார். இந்த சந்திப்பின்படி நவ பிரஜாதந்திரவாதி பெரமுன (புதிய ஜனநாயக முன்னணி) என்ற பெயரில் அதே காஸ் சிலிண்டர் சின்னத்தில் எதிர்வரும் தேர்தலில் கூட்டணி அமைத்து போட்டியிட தீர்மானம் எடுக்க ப்பட்டிருக்கின்றது. அதற்கான அங்கீகாரத்தை தேதுர்தல் ஆணைக்குழுவும் வழங்கி இருக்கின்றது. அதனால் ரனிலுடன் இணைந்திருந்தவர்கள் யாரும் மீண்டும் மஹிந்த ராஜபக்ஷவின் முகாமுக்கு திரும்பி போகாமல் தத்தமது வேட்பாளர் அந்தஸ்தை தக்கவைத்துக் கொண்டுள்ளனர். இவர்கள் அனைவரும் கேஸ் சிலிண்டர் சின்னத்தில் களத்தில் இறங்க உள்ளனர்.

இவர்களது இலக்கு ஏற்கனவே ஜனாதிபதித் தேர்தலில் ரனில் விக்கிரமசிங்காவுக்கு கிடைத்த 22 இலட்சம் வாக்குகளை இலக்குவைத்தே போட்டியிட தயாரானாலும் அதற்கு மேல் கூடுதலாக மக்கள் ஆதரவை பெற்று கூடுதலான ஆசன பலத்துடன் ஆட்சியில் பங்காளர்களாக வரவேண்டும் என்பதாகும். அதே நேரம் ஸ்ரீ.ல.சு.கட்சி யின் நிமல் சிரிபால டி. சில்வா அணியும் ரனில் விக்கிரமசிங்காவுடன் 2024.10.03 ஆம் திகதி பேச்சுவார்த்தை நடத்தி இருக்கின்றது. ஆனாலும் சுதந்திரக் கட்சி மூன்றாக பிளவுபட்டு முத்தரப்பாக இருப்பதால் எந்த தரப்பு யாருடன் கூட்டுச் சேர்வது என்பது தொடர்பாக இன்னும் முடிவு எட்டப்பட்டதாக தெரியவில்லை. இதற்கிடையில் பொதுஜன ஐக்கிய முன்னணி பிரிவினர் ஸ்ரீ.ல.சு.கட்சி என்ற பெயரில் அல்லது பொ.ஐ.முன்னணி என்ற பெயரில் கதிரை சின்னத்தில் போட்டியிட எடுத்துள்ள தீர்மானத்திற்கு சுதந்திரக் கட்சியின் முன்னாள் செயலாளர் நாயகம் தயாசிரி ஜயசேகர எதிர்ப்பு தெரிவித்துள்ளார். அது தொடர்பாக தேர்தல் ஆணையாளருக்கும் எழுத்து மூலம் அறிவித்திருப்பதாக கூறினார்.

மறுபுரமாக சஜித் பிரேமதாசா தலைமையிலான சமகி ஜனபலவேகய அணியினரும் ரனில் விக்கிரமசிங்காவுடன் பேச்சுவார்த்தை நடத்தி ஒரு இணக்கப்பாட்டிற்கு வர முயற்சி செய்துள்ளனர். இந்த இணக்கப்பாடு எதற்காக என்றால் மீண்டும் யானைச் சின்னத்தில் ஐ.தே.கட்சி என்ற பெயரில் கட்சியை புணரமைப்பு செய்து தேர்தலை சந்திப்பதற்கான நகர்வை முன்னெடுப்பதற்காகவாகும். ஆனாலும் அதற்கான பேச்சுவார்த்தைகள் சாத்தியப்படவில்லை. மீண்டும் ரனில் விக்கிரமசிங்கா தேர்தலில் போட்டியிடுவதில்லை என்ற அறிவிப்பை செய்திருந்ததால் முன்னைய பச்சை நிர யானைச் சின்னத்தில் கட்சியை புணரமைப்பு செய்து பிரிந்தவர்களை ஒன்று திரட்டி ஒரே அணியாக இந்த பொதுத் தேர்தலில் களத்தில் இறங்கினால் ஜே.வி.பி. யின் முன்னோக்கிய வெற்றியை தடுக்கலாம் என்ற எதிர்பார்ப்பு அதன் ஆதரவாளர் களிடையில் வலுவடைந்து காணப்படுகின்றது. அதனால் இந்த முயற்சி மேற்கொள் ளப்பட்டதாயினும் வெற்றியளிக்கவில்லை. இதில் பிரதானமாக ரனில் விக்கிரமசிங்கா தலைமைத்துவத்தை விட்டு தேர்தலில் தலையிடாமல் ஒதுங்க வேண்டும் என்ற கோரிக்கை முன்வைக்கப்பட்டதாயினும் அதற்கு அவர் இணங்காத தால் சமகி ஜனபல வேகயவுடனான இணக்கம் வெற்றியளிக்கவில்லை.

அதனால் சஜித் அணியினர் மீண்டும் ஜனாதிபதித் தோதலை சந்தித்தது போன்று தனி வழியில் தேர்தலை சந்திக்க தீர்மானித்து வருகின்றனர். ஆனாலும் ஏற்கனவே சஜித் பிரேமதாசாவுடன் ஜனாதிபதித் தேர்தலில் இணைந்து ... தரப்பினர், தமிழ் தரப்பினர் ஆகியோர் அவரவர் பாட்டில் தனியாக தேர்தலுக்கு முகம் கொடுக்க தயாராகி வருவதால் ஒருவகையில் இந்த தேர்தல் சஜித் தலைமையிலான சமகி ஜனபலவேகய கட்சிக்கு பாரிய சவாலாக அமைய இருக்கின்றது. அதன் ஒட்டுமொத்த எதிர்பார்ப்பாக அமைவது இந்த தேர்தலில் ஜே.வி.பி. யால் ஆட்சி மைப்பதற்கு தேவையான 113 ஆசன பலத்தை பெற முடியாமல் போகும் தருணத்தில் ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்காவுக்கு ஏதோ ஒரு வகையில் ஆட்சிக்காக முட்டுக் கொடுக்க வேண்டிய நிலை ஏற்படலாம் என்ற நிலை இருந்து வருகின்றது.

ஏற்கனவே நடந்து முடிந்த ஜனாதிபதித் தேர்தலில் ஜே.வி.பி. நாடு முழுவதிலும் பெற்றுக்கொண்ட வாக்குகளின் அடிப்படையில் 105 ஆசனங்களை பெறலாம் என்ற நிலை காணப்படுகின்றது. இருந்தாலும் 2019 ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தல் நடந்து 09 மாதங்களின் பின்னரே பொதுத் தேர்தல் நடத்தப்பட்டது. இம்முறை ஜனாதிபதித் தேர்தல் நடந்து முடிந்து மிகவும் குறைந்த காலப்பகுதியான இரண்டு மாதங்களுக்குள் பாராளுமன்றத்திற்கான பொதுத் தேர்தல் நடத்தப்படுவதால் ஜே.வி.பி. க்கு மேலும் வாக்குகள் குறைவடைய வாய்ப்பு இல்லை என்றே கூறலாம். ஏனெனில் ... சூட்டோடு அடுத்த கட்ட தெர்தல் நடைபெறுவதால் ஏற்கனவே வேறு மாற்று கட்சிகளுக்கு ஆதரவளித்த வாக்காளர்கள் சரியான முறையில் நிலைமை யை புரிந்து கொண்டவர்களாக ஜே.வி.பி.யின் கரங்களை பலப்படுத்த வேண்டும் என்று வாக்களிக் முன்வந்தால் அது ஏனைய கட்சிகளுக்கு பெரும் அடியாக அமையலாம். அவற்றின் செல்வாக்கு இந்த தேர்தலில் சரிந்துவிடும்.

இவ்வாறான நிலையில் அநுரகுமார திசாநாயக்கா தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்தி எப்படியும் 113 ஆசனங்களுக்கு மேல் பெற்று ஒரு பலமான ஆட்சியை நிறுவ வாய்ப்பு இருக்கின்றது. எதிரணிகளின் வாக்குப்பலம் மேலும் 25 வீதத்தால் குறைவடையலாம். அப்படியான ஒரு நிலை ஏற்படுமானால் சமகி ஜனபலவேகய, ரனிலின் ஆதரவு கூட்டணி உட்பட ஏனைய கட்சிகளின் பலம் மேலும் வீழ்ச்சியடையலாம். அதனால் இயன்றவரையில் சஜித் தலைமையிலான கூட்டணி யை மிகவும் பலம் கொண்டதாக அமைப்பதற்கான முயற்சிகள் மேற்கொள்ள ப்படுகின்றன. இந்நிலையில் ஸ்ரீ.ல.மு. காங்கிரஸ், அகில இலங்கை மக்கள் காங்கிரஸ், தேசிய காங்கிரஸ் ஆகிய கட்சிகள் தனித்து போட்டியிடுவதா கூட்டாக போட்டியிடுவதா என்ற நிலைப்பாட்டை இன்னும் எட்டவில்லை. கிழக்கில் கடந்த 2019 ஆம் ஆண்டு நடைபெற்ற பொதுத் தேர்தலில் வெற்றிபெற தவறிய முஸ்லிம் தரப்பு கூட்டணி கட்சிகள் இம்முறை தேர்தலில் அவற்றிற்குள் கூட்டணி அமைப்பதா அல்லது தனித்து போட்டியிடுவதா என்று ஆலோசித்து வருகின்றன. இதில் ஐக்கிய சமாதான கூட்டமைப்பு, தேசிய ஐக்கிய கூட்டணி (நுஆ) என்பன தனித்தே போட்டியிட திட்டமிட்டு வருகின்றன.

எவ்வாறாயினும் கிழக்கின் நிலைமைகளை அவதானிக்கும் போது நடந்து முடிந்த ஜனாதிபதித் தேர்தலில் கிழக்கில் அநுரகுமார திசாநாயக்காவை எதிர்த்து போட்டியிட்ட சஜித் பிரேமதாசாவுக்கே ... மாற்றம் ஏற்பட வாய்ப்பு இருக்கின்றது. ஏற்கனவே ரவுப் ஹக்கீம் தலைமையிலான முஸ்லிம் காங்கிரஸ் மற்றும் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் ஆகிய கட்சிகளை வேரறுக்க கிழக்கில் கடுமையான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. ரவுப் ஹக்கீம், ரிசாத் பதியுத்தீன் ஆகியோருக்கு எதிராக முஸ்லிம் சமூகத்திற்குள் இருந்தே எதிர்ப்பலைகளை உருவாக்க கடுமையான முயற்சிகள் மேற்கொள்ளப் பட்டதாயினும் ஜனாதிபதித் தேர்தலில் ஓரளவுக்கு அவர்களது தொகுதிகளில் மக்கள் ஆதரவை தக்க வைக்க முடிந்தது. ஆனாலும் கிழக்கை பொருத்தவரையில் முஸ்லிம் சமூகம் சார்ந்த இந்த பிரதான இரண்டு கட்சிகளுக்கு மேலதிகமாக அதாஉல்லாஹ்வின் தலைமையிலான தேசிய காங்கிரஸ், எம்.ரி. ஹசன் அலி தலைமையிலான ஐக்கிய சமாதான கூட்டமைப்பு, தேசிய ஐக்கிய முன்னணி, நல்லாட்சிக்கான தேசிய முன்னணி, சமூக நீதிக் கட்சி, எம். நயிமுல்லாஹ் தலைமையிலான ஐக்கிய தேசிய கூடட்டமைப்பு, ஜனநாயக ஐக்கிய கூட்டணி (துஆ) என்று பல சிறிய அணிகள் உள்ளன.

இவை கடந்த 2019 பொதுத் தேர்தலில் போட்டியிட்டு ஆசனங்களை பெறும் அளவிற்கு போதுமான வாக்குகளை பெற தவறினாலும் இம்முறை தேர்தலில் வேட்பாளர்களை நிறுத்தி களம் இறங்கும் போது

தொடர்ச்சி 8ம் பக்கம் பார்க்க...

## இஸ்ரேல்...
(7ம் பக்கத் தொடர்ச்சி)

மரபு ரீதியான கட்சிகளாக ஆசனங்களை பெற்று வரும் ஸ்ரீ.ல.மு. காங்கிரஸ் கட்சி மற்றும் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் ஆகிய கட்சிகளுக்கு பெரும் நெருக்கடியை ஏற்படுத்தலாம். ஆத்துடன் ஜே.வி.பி. யின் தேர்தல் வியூகமாக அமைவதும் ரவுப் ஹக்கீம், ரிசாத் பதியுத்தீன் மற்றும் சமகி ஜனபலவேகய ஆகிய கட்சியில் இருந்து போட்டியிடும் முன்னாள் முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்களை இம்முறை வரவிடாமல் தடுப்பதாகும். ஏற்கனவே அதன் திட்டமாக இருந்து வரும் 225 பேரும் வேண்டாம். புதிலாக புதிய 225 வேண்டும் என்ற தேர்தல் வியூகத்தில் முஸ்லிம் அரசியல் தலைவர்களும் உள்ளடங்குகின்றனர்.

இந்நிலையில் வடக்கில் தமிழரசுக் கட்சியின் தலைமையில் கூட்டாக அல்லது தனித்து போட்டியிட்டு ஏற்கனவே வடக்கில் பாதுகாக்கப்பட்டு வரும் ஆசனங்களை தக்கவைத்துக் கொள்ள முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. எவ்வாறா யினும் தேர்தலின் பின்னர் பெரும்பான்மை பலத்தை பெற்று ஆட்சி அமைக்கும் கட்சிக்கு அல்லது அரசுக்கு தமிழரசுக் கட்சியின் ஆதரவு கிடைக்கும் என்று அண்மையில் ஜனாதிபதி சட்டத்தரணி எம். சுமந்திரன் அறிவித்துள்ளார். அதே நேரம் மலையகத்தில் உள்ள இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் உட்பட கட்சிகளும் யாருக்கு ஆதரவளிப்பது அல்லது யாருடன் கூட்டணி அமைப்பது என்ற விடயத்தில் இன்னும் தீர்க்கமான நிலைப்பாட்டை எட்டவில்லை. அதே நேரம் மூன்றாவது சக்தியாக வரவேண்டும் என்ற எதிர்பார்ப்பில் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட்ட திலிப் ஸயவீர தலைமையிலான புதிய கூட்டணி ஒன்றும் தயாராகி வருகின்றது. அதனோடும் முன்னைய அரசியல்வாதிகள் பலர் இணைந்து வருகின்றனர்.

எவ்வாறாயினும் 2024 பொதுத் தேர்தலுக்கான வேட்புமனுக்களை ஏற்றுக்கொள்ளல் 2024.10. 04 ஆம் திகதி முதல் 11 ஆம் திகதி வரை இடம்பெற இருக்கின்றது. இறுதி தினம் 2024.10.11. ஆம் திகதி வெள்ளிக்கிழமை ஆகும். பதிவு செய்யப்பட்ட 84 அரசியல் கட்சிகள் உள்ளன. இவற்றுள் அரசியல் நடவடிக்கைகளில் ஈடபடும் கட்சிகளாக 44 கட்சிகள் அளவிலே உள்ளன. இதற்கிடையில் ஒவ்வொரு அரசியல் கட்சியும் பொதுத் தேர்தலில் தனித்து போட்டியா அல்லது இன்னுமொரு கட்சியுடன் இணைந்து கூட்டணியாக போட்டியா என்பது தொடர்பாக தீர்மானம் எடுக்க வேண்டிய திண்டாட்ட நிலையில் இருக்கின்றன. எதுவானாலும் 2001 - 2003 ஆம் ஆண்டு காலப்பகுதியில் ஏற்பட்டது போன்று ஜனாதிபதி வேறு கட்சி, பாராளுமன்றம் வேறு பட்சி என்ற நிலை ஏற்படுமா என்று சிந்திக்க வெண்டி இருக்கின்றது. அவ்வாறான ஒரு நிலை எற்படுமானால் மீண்டும் நாட்டில் ஒருவிதமான ஸதீரமற்ற அரசியல் நிலை ஏற்படலாம். அவ்வாறான ஆட்சி உரிய 05 வருட காலத்திற்கு தாக்குப் பிடிக்கும் என்று எதிர்பார்க்க முடியாது. அதே போன்றதொரு நிலைதான் 2015 - 2019 ஆம் ஆண்டு காலப்பகுதியிலும் ஏற்பட்டது. அப்போதும் ஜனாதிபதி ஸ்ரீ.ல.சு.கட்சியை சேர்ந்தவர்ராகவும் பாராளுமன்றம் ஐ.தே.கட்சி கூட்டணியை சேர்ந்ததாக இருந்தது.

அதனால் 05 வருட காலம் பூர்த்தியடைய முன்னரே இடையில் பாராளுமன்றத்தை கலைக்க வேண்டிய நிலை ஏற்பட்டதோடு அமைச்சரவையின் தீர்மானங்களுக்கு ஜனாதிபதி ஒத்துழைக்காத போக்கில் காலை இழுக்கும் நிலை ஏற்பட்டது. அதனால் அக்காலப்பகுதியிலும் நாடு பாரி அபிவிருத்தி பின்னடைவை கண்டது. அதனால் இம்முறை நடைபெறுகின்ற 2024 பொதுத் தேர்தலிலும் அப்படியான இரண்டும் கெட்டான் நிலை உருவாகாமல் இருப்பது அவசியமாகின்றது. எவ்வாறாயினும் ஜனாதிபதித் தேர்தல் முடிவுகளை வைத்து நோக்கும் போது மக்கள் நவீன கல ஓட்டத்திற்கு ஏற்ப சிந்திக்க ஆரம்பித்துள்ளனர் என்பது தெளிவாக தெரிகின்றது.

# பிரதமர் ஹரிணி அமரசூரியவின் சாதனையை கொண்டாடுமம் புதுதில்லி ஹிந்துக் கல்லூரி



(திருச்சி எம். கே. ஷாகுல் ஹமீது)

இலங்கையின் 16-வது பிரதமராகவும், பெருமைக்குரிய பதவியை வகிக்கும் மூன்றாவது பெண்ணாகவும் வரலாற்றில் இடம்பிடித்துள்ள முன்னாள் மாணவி முனைவர் ஹறிணி அமரசூரியவின் சாதனையை ஹிந்துக் கல்லூரி பெருமையுடன் கொண்டாடுகிறது என்று ஹிந்து கல்லூரி நிர்வாகம் தெரிவித்துள்ளது.

இதுகுறித்து ஹிந்து கல்லூரி நிர்வாகம் விடுத்துள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது : இலங்கையின் புதிய பிரதமராக பதவியேற்றுள்ள ஹறிணி அமரசூரிய, புதுதில்லியில் உள்ள ஹிந்து கல்லூரியின் முன்னாள் மாணவி ஆவார். 1991 முதல் 1994 வரையிலான காலகட்டத்தில் ஹிந்து கல்லூரியில் சமூகவியல் துறையில் பயின்று பட்டம் பெற்றுள்ளார் ஹறிணி அமரசூரிய.

தொடர்ந்து, ஆஸ்திரேலியாவில் மானுடவியல் படிப்பு மற்றும் எடின்பர்க் பல்கலைக்கழகத்தில் சமூக மானுடவியலில் முனைவர் பட்டமும் ஹறிணி பெற்றுள்ளார்.

பல்கலைக்கழக விரிவுரையாளராக பணியாற்றியுள்ள ஹறிணி, இளைஞர்கள், அரசியல், பாலினம், வளர்ச்சி, குழந்தைகள் பாதுகாப்பு, உலகமயமாக்கல் உள்பட பல்வேறு தலைப்புகளில் ஆய்வுகள் செய்ததுடன் புத்தகங்களையும் எழுதியுள்ளார்.

“இலங்கையின் 16-வது பிரதமராகவும், பெருமைக்குரிய பதவியை வகிக்கும் மூன்றாவது பெண்ணாகவும் வரலாற்றில் இடம்பிடித்துள்ள முன்னாள் மாணவி முனைவர் ஹறிணி அமரசூரியவின் சாதனையை ஹிந்துக் கல்லூரி பெருமையுடன் கொண்டாடுகிறது. ஹிந்துக் கல்லூரியின் வகுப்பறைகளில் இருந்து தனது நாட்டின் உயரிய பதவியை அடைந்துள்ள ஹறிணியின் பயணத்தை கண்டு அவரது ஆசிரியர்கள் பெருமை கொள்கிறார்கள்” எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.




# ஓய்வு நேரங்களையும் மகிழ்நிலை செயற்பாடுகளையும் முகாமை செய்தல்

“இரண்டு அருள்வளங்கள் காணப்படுகின்றன. அவற்றில் அநேகமான மக்கள் கவனயீனமாகவே உள்ளனர் அவை ஆரோக்கியமும் ஓய்வு நேரமுமாகும் ”

மனிதர்கள் சகலருக்குமே இறைவன் வழங்கியுள்ள இரு பெரும் அருட்கொடைகள் ஆரோக்கியமும் ஓய்வுமாகும். இந்த இரண்டையும் முதலில் நாம் எமக்காக வடிவமைக்கவும் திட்டமிடவும் முன்னர் ஏனைய வாழ்வியல் அம்சங்களை திட்டமிட்டு முகாமை செய்ய வேண்டும். வாழ்க்கைக் கோலம் சிதைந்து ஒழுங்கீனமாக னளைழசனநச இருந்தால் உள அழுத்தங்களும் ளவசநளள யனெ ிசநளளரசந நேரமின்மையும் வந்து எமது ஆரோக்கியத்தை பிடுங்கி உடல் உள நோயாளியாக மாற்றும். அதன் விளைவு ஓய்வின்றி உளைச்சலுக்கு ஆளாக வேண்டி வரும்.

எனவே, வாழ்வை ஒழுங்கமைக்காதவர்களுக்கு இப்பதிவு பயன் தரவே தராது என்பதைக்கூறிக்கொண்டு...

சமகால உலகில் சகல செயற்பாடுகளும் குறிப்பாக கல்வி சார் செயற்பாடுகளும் கூட அவற்றை மகிழ்வான அனுபவமாக மாற்றவே முனைகின்றன. நவீன கலைத்திட்டங்கள் கூட ஆடல், பாடல், அசைவு, வரைதல், படைப்பாக்கம் செய்தல், அபிநயம், நடிப்பு, களப்பயணம், அவதானம், உற்றுநோக்கல், பகுத்தல், தொகுத்தல், அலசல் போன்ற செயற்பாடுகள் மூலம் கற்றல் அனுபவங்களை நிலையான நடத்தை மாற்றத்தை கொண்டு வரும் நோக்கில் மகிழ்வான மறக்க முடியாத அனுபவமாக கையளிப்பதையே நோக்காக கொண்டுள்ளன.

வெறுமனே நான்கு சுவர்களுக்கிடையில் குந்திக்கொண்டு ஆசிரியரின் இப்போதைக்கு நிறப்பப்பட்ட பூரண பாத்திரத்தில் இருந்து மாணவர்களின் வெற்றுக்கோப்பைக்கு சொட்டுச் சொட்டாக வடிக்கின்ற பாரம்பரியங்களை சம்பிரதாயங்களை மரபுகளை உடைத்து விட்டு நவீன கல்வி ஒழுங்குகளும் பாங்குகளும் எவ்வளவோ பாய்ந்து முன் வந்துள்ளன.

ஆனால் மனிதனின் அன்றாட வாழ்வில் மட்டும் மகிழ்வான பொழுதுகளையோ டுநளைரசந மகிழ்வளிக்கும் செயல்களையோ சுநஉசநயவழைெ கண்டுகொள்ளாமல் பயணித்ததன் விளைவு தான் இன்று முன்னெப்பொழுதும் இல்லாத மன நோய்களும் அழுத்தங்களும் அவனை வாட்டி வதைக்கின்றன. அவனும் வாழ்க்கை பயணத்தில் உஷ்ணம் பற்று வாடி வதங்கிய பயிர்கள் போல இறுதியில் பயனற்று காய்ந்து கருகி விடுகின்றான.

ஒரு மனிதனுக்குள் கலை உணர்வு, இயற்கையை நேசித்தல், ரசித்தல், பாதுகாத்தல் என்பன இயல்பானது. இயல்பூக்கம் சார்ந்தது. நகர் புறத்தில் வாழும் கட்டட நிர்மாண பணிகளில் ஈடுபடும் கொத்தர்களும் கூட கண்கவர் அழகு நிலையில் தான் கட்டடங்களை வடிவமைத்து நிறம்பூசி உரியவர்களிடம் கையளிக்கின்றனர்.

ஒருவரது வாழ்க்கை கோலம் ஒழுங்கமைக்கப்பட்டு விட்டால் அவர் தரமான முறையில் மகிழ்வான நேரங்களை ஒழுங்கமைத்து வாழ்கையில் அவரது ஆன்மாவும் ஆளுமையும் ஒரே நிறத்தில் போஷிக்கப்படும். பண்படுத்தப்படும். நிரந்தர சுவன வாழ்வு குறித்து கூறி ஆசையூட்டும் இறைவன் அதன் மன அமைதி குறித்த காட்சியை தான் கண்முன் கொண்டு வருகின்றான்.

பாரம்பரிய மரபுகளை எடுத்துப்பார்த்தால் “ கூடி வாழ்ந்தால் கோடி நன்மை” நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்” ஆடிப்பாடி வேலை செய்தால் அலுப்பிருக்காது” போன்ற வசனங்கள் வாக்கியங்களை நிதர்சனமாக காட்டியவர்கள். அவர்களது உழைப்பும் வாழ்க்கையும் ஒன்றாக இருந்தது. வாழ்வு மகிழ்வளிப்பதாக அமைந்தது. ஆரோக்கியமாக இருந்தார்கள். அழுத்தங்களில் இருந்து விடுபட்டார்கள்.

நவீன வாழ்வமைப்பு புகுந்து தான் வாழ்வை கூறுபோட்டது. வாழ்க்கைப்பயணம் போட்டியும் பொறாமையும் ஏக்கமும் எதிர்பார்ப்பும் மிக்கதாக மாற்றப்பட்டது. ஆரோக்கியமும் இழந்தது. மகிழ்வும் தொலைந்தது. இன்று எவ்வளவு சம்பாதித்தாலும் அது மருத்துவத்துக்கு செலவாகின்றது. ஓய்வை அனுபவிக்க அவகாசமே இல்லை எனுமளவு சுற்றி சுழன்று ஓடுகிறோம். தேடுகிறோம். எஞ்சுவது நோயும் மன அழுத்தமும் தான்.

இந்த நிலையில் தான் எமக்கான மகிழ் பொழுதுகளை நாம் திட்டமிட்டு ஒழுங்கமைக்க வேண்டும். இது ஆளுக்காள் பிரதேசத்துக்கு பிரதேசம் வாழும் இடம் வாழ்க்கைக் கோலம் ஆண் பெண் குழந்தைகள் முதியவர்கள் மாற்றுத் திறனாளிகள் என்ற வகையில் வித்தியாசமான மனிதர்கள் இருக்கும் நிலையில் முற்றிலும் வேறுபடும்.

ஆக எமது அன்றாட வாழ்வின் ஒரு சிறு பகுதியை நாம் எமக்கு மகிழ்வளிக்க ஒதுக்கி செயற்படாத வரை நாம் அழுத்தங்களில் இருந்து விடுபட மாட்டோம். இதை முறையாக கையாளாவிட்டால் அது பெரு நஷ்டம் பேரிழப்பு தான். வாழ்வில் பெரு வெடிப்பு கூட வந்து தற்கொலைக்கும் செல்ல வழியமைக்கும்.

எனவே எமது நேரத்தை எமக்கு வழங்கப்பட்ட அருளாக கருத வேண்டும். அதன் பெறுமதியை உணர்ந்து களிப்பதை வணக்கமாக கருத வேண்டும். நேரத்தை பயனுள்ள வகையில் பயன்படுத்துவது தரமான ஒரு செயற்பாடு. அது ஆரோக்கியமாக அமைய வேண்டும். தனக்கும் தன்னை சார்ந்தவர்களுக்கும் பயனும் மகிழ்வும் தர வேண்டும். அது அனுமதிக்கப்பட்ட விளையாட்டுக்களாகவோ சமூக பொதுப்பணிகளாகவோ வீட்டுதொட்டமாகவோ உள்ளாசப்பயணமாகவோ அமையலாம்.

இந்த நிலை எதவுமே இல்லாத போது தான் வாழ்வில் அலுப்பும் சலிப்பும் ஏற்படும். விரக்தி குடிகொள்ளும். உள்ளம் இறுகி வரண்டு போகும். வாழ்வில் பிடிமானம் அற்றுப்போகும். வாழ்வை சுவைக்க வேண்டுமானால் கொஞ்சம் வெளியில் உலாவ வேண்டும். இயற்கை படைப்புகளை உன்னிப்பாக அவதானித்து உற்று நோக்க வேண்டும். நோயாளிகளை கஷ்டப்படுவோரை அவதிப்படுவோரை காண வேண்டும். தன்னை விடவும் குறைந்த வசதிகளோடு வாழும் மனிதர்களுடன் கொஞ்சம் உரையாடி அனுபவங்களை பெற வேண்டும். இல்லாத போது நாங்கள் உயிர் மூச்சுடன் மயனாத்தில் நடமாடும் புதைகுழிகளில் மகிழ்வை தொலைத்து சாவை எதிர்பார்த்து செத்து மடிந்து தவித்து வாழ்கிறோம். அவ்வளவுதான். அத்தகையவர்கள உயிருள்ள அசையும் பிணமாக வாழ்கிறார்கள்.

நவீன வாழ்க்கை மரபிற்கு வித்திட்ட பாரம்பரிய கிரேக்க மரபை எடுத்துக்கொண்டாலும் நல்ல கல்வியாலும் சிறந்த மகிழ்வளிப்புக்கான நிலைமைகளை அனுபவிப்போராளுமே மகிழ்வாக வாழ முடியும். சிறந்த பிரஜைகளாக இருக்க முடியும் என்ற கருத்து நிலவியது. பிளேட்டோ கூட ஒழுங்கமைக்கப்பட்ட மகிழ்வான பொழுதுகளை அனுபவிக்கும் நிலையை உயர்வாக கருதியதால் தான் கிரேக்கத்தில் அது பாடசாலை மரபாக உருவெடுத்தது. ளஉாழடந எனும் கிரேக்க சொல் கற்றலையும் மகிழ்வான பொழுதையும் உள்ளடக்கிய இடம் எனும் பொருள் தரக்கூடியது. கற்றல் வாழ்வு மகிழ்பொழுது இவற்றை முகாமை செய்தால் வாழ்வு சுகமாக அமையும்.




**நாச்சியாதீவு பர்வீன்**

# வரவு உள்ள மட்டில்தான்

நட்புகளும்
அப்படித்தான்
நாலு காசுகள்
இலாபம்
என்பதற்காகவே
கொண்டாடுவோர் அதிகம்

முகஸ்துதி பாடுவோரை
விடவும்
கடன்காரரை நம்பவும் முடியும்

வரவு உள்ள மட்டில்தான்
வாழ்க்கை என்றாகி விட்டது

ராஜயோகம் இருப்பது
போலதான்
பலர் வேசம் போடுகின்றனர்
அழகு சாதனங்களையும் தாண்டி
கனபேரை முகம் காட்டி
விடுகிறது

இரத்தம் அருந்திட முடியாததால்
இறைச்சிகளை உண்கின்றனர்

சந்தேகங்களைத் தோண்டி
சமாதானப்பட்டுக் கொள்வோர்
தாராளமாக இருப்பதால்
நன்மைகள் நாணி நிற்கின்றன

வார்த்தைகளையும்
நேரங்களையும்
நிதானமாக பயன்படுத்துபவர்கள்
தவறுகளைத் தள்ளி
வைத்து
தன்னையும் சரிபார்ப்பர்."

**– எழுகவி ஜலீல் –**

# அண்மைய வரவுகள்




வெண்ணிலா கவிதை மஞ்சரி ஆசிரியர் கப்பாரை அவரது சஞ்சிகை மூலமே அறிவேன். அவரது புத்தகம் கிடைத்த பிறகுதான் அவர் எனது சமகாலத்தில் எழுதத் தெடாங்கியவர் என அறிய வந்தேன்.

அவர் எழுதிய 15 கதைகளை உள்ளடக்கியது இந்தச் சிறுகதைத் தொகுதி. அனைத்துமே "தமிழன்" பத்திரிகையில் வெளிவந்ததவை. "தமிழன்" பத்திரிகை சமகாலத்தில் புதிய புதிய படைப்பாளிகளை அறிமுகம் செய்து வருகிறது. அவர்களது படைப்புகளுக்குக் களம் அமைத்து வருகிறது.

நமக்குத் தெரியாமல் எத்தனையோ படைப்பாளிகள் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். சிலர் அமைதியாக எழுதிக் கொண்டிருக்கிறார்கள். மருதமுனைக்கு எத்தனையோ தடவைகள் வந்து சென்றிருக்கிறேன். படைப்பாளிகள் பலரைச் சந்தித்திருக்கிறேன். ஆனால் அறிமுகம் இல்லாத காரணத்தால் கப்பாரைச் சந்திக்கும் வாய்ப்புக் கிடைக்கவில்லை.

புத்தகத்தின் அமைப்பு, வடிவம், அச்சு, கட்டுமானம் என எல்லாமே என்னைக் கவர்ந்திருந்தது. அதற்காகவே அவரைப் பாராட்ட அழைப்பெடுத்துப் பேசினேன்.

அப்போதுதான் வங்கித் தொழிலில் இருந்த காணரத்தால் இலக்கியத்துடனான தொடர்பு நீண்ட காலம் அறுந்திருந்ததைச் சொன்னார்.

அடுத்தடுத்த நூல்களின் வெளியீடுகளில் ஈடுபட்டிருப்பதால் வரும் நூல்களை நுனிப்புல் மேய மட்டுமே முடிகிறது. கப்பாரின் சிறுகதைகளை வாசித்து ஒரு குறிப்பிடும் வாய்ப்புக் கிடைக்க வேண்டும் என்று எண்ணியிருக்கிறேன். பார்க்கலாம்!

**– அஸ்ரப் சிஹாப்தீன் –**

# நான் முகிலாகிறேன்




மக்கொனையூராள் என அறியப்பட்ட பர்ஹானா அப்துல்லாஹ்வின் இரண்டாவது கவிதைத் தொகுதியான "நான் முகிலாகிறேன்" நூல் கிடைக்கப் பெற்றேன்.

70 பக்க நூலில் சிறியதும் பெரியதுமாக 61 கவிதைகள் உள்ளடங்கியிருக்கின்றன.

பர்ஹானா தனது கவிதைகளை அவ்வப்போது முகநூலிலும் பகிர்ந்து வருகிறார். அவற்றிலிருந்து சில கவிதைகளை நான் "கவிதா நதி"யிலும் ஒலிபரப்பியிருக்கிறேன்.

கவிதைக்கென அவர் எடுத்துக் கொண்ட பொருளை அக்கவிதைக்குள் பேசி விடுகிறார். ஓசைக் கவிதைகள் நன்றாக இருக்கின்றன. அவரது முதலாவது கவிதைத் தொகுதியில் இடம்பெற்றிருக்கும் கவிதைகளை விட இக்கவிதைத் தொகுதியில் கவிதைக்ள மேம்பட்டிருக்கின்றன.

சமகால ஆரம்பக் கவிதைகளை வெளியிடுவோரது கவிதைத் தொகுதிகளுக்கு அப்பால் முன்னோடிகளின் கவிதைபளைப் படிப்பதன் மூலம் குறிப்பிட்டுச் சொல்லக் கூடிய ஒரு கவிஞராக இவர் மாற்றம் பெறுவார் என்பது எனது நம்பிக்கை. அவருக்கு வாழத்துகள்!

அருவிக்கரை தொகுப்பில் வாசகர்களின் பெறுமதியான ஆக்கங்களையும் அனுப்பி வைக்க முடியும்.
**"அருவிக்கரை" என கட்டமிட்டு மின்னஞ்சல் செய்யவும்:**
**editor.uthayam@gmail.com**

# கற்பிட்டி அல் அக்ஸா தேசிய பாடசாலை மாணவர்களுக்கு மரக்கன்றுகள் வழங்கி வைப்பு





**(எம் எச் எம் சியாஜ் – றிஸ்வி /ஹுசைன், எம் யூ.எம் சனூன்)**

சர்வதேச சிறுவர் தினத்தை முன்னிட்டு கற்பிட்டி அல் அக்ஸா தேசிய பாடசாலையில் தரம் 08 மற்றும் 09 ல் கல்வி பயிலும் மாணவ மாணவிகளுக்கு மரக் கன்றுகள் வழங்கி வைக்கும் நிகழ்வு அண்மையில் இடம்பெற்றது.

வீட்டிலிருந்து பசுமையான சூழலை உருவாக்கும் முகமாக பாடசாலை மாணவர்களுக்கு இச் சிறுவர் தினத்தை முன்னிட்டு மரக்கன்றுகள் வழங்கி வைக்கப் பட்டுள்ளதாக பாடசாலையின் அதிபர் யூ.எம்.எம் அமீர் இதன்போது கருத்து தெரிவித்தார்.

# அக்கரைப்பற்று சமுர்த்தி வங்கிகளில் சர்வதேச சிறுவர் தின நிகழ்வு



**(இஸட்.ஏ.றஹ்மான்)**

சர்வதேச சிறுவர் தினத்தை முன்னிட்டு சிறுவர்களுக்கான கெக்குலு சேமிப்பு கணக்குகள் ஆரம்பித்து வைக்கும் நிகழ்வு அண்மையில் (01) அக்கரைப்பற்று மேற்கு மற்றும் அக்கரைப்பற்று கிழக்கு சமுர்த்தி வங்கிகளில் இடம்பெற்றது.

இன் நிகழ்வுகளில் பிரதம அதிதியாக மாவட்ட சமுர்த்திப் பணிப்பாளர் எம்.ஏ.சி..அகமது ஷாபிர், கௌரவ அதிதிகளாக தலைமைப்பீட சமுர்த்தி முகாமையாளர் எம்.ஜே. எம் நிஹ்மத்துள்ளா, வங்கிகளின் முகாமையாளர்களான யூ.கே.நழீம், கே.சத்தியப் பிரியன் மற்றும் சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

# காத்தான்குடி மத்திய கல்லூரி மாணவர் ஹக்காம் தங்கப்பதக்கம் வென்றார்

**(அஸ்ஹர் இப்றாஹிம்)**





கிழக்கு பல்கலைக்கழகத்தினால் நடத்தப்பட்ட டெக்னோ பாக் புத்தாக்கப் போட்டியில் காத்தான்குடி மத்திய கல்லூரி மாணவன் எம்.எப். எம்.ஹக்காம் முதலாம் இடத்தினை பெற்று தங்கப் பதக்கத்தினை பெற்றுக் கொண்டார்.

இலங்கை கிழக்கு பல்கலைக் கழகத்தினால் பாடசாலை மாணவர்களுக்கு இடையிலான புத்தாக்க மற்றும் ரோபோ டிக்ஸ் கண்காட்சி போட்டியானது அண்மையில் கிழக்குப் பல்கலைக்கழக டெக்னோபாக் வளாகத்தில் இடம்பெற்றது.

நிகழ்வில் கலந்து கொண்ட தரம் 10 ,11 பிரிவில் கல்வி பயிலும் ஏனைய மாணவர்களுக்கு சான்றிதழ்களும் வழங்கி வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## மனநலமும் ஆலோசனையும் 50

# செழிப்பான வாழ்க்கை

எம்முடைய வாழ்க்கை செழிப்பாக இருக்கிறது என்றால் அதை நம்மில் பலர் ஏற்றுக் கொள்ள மாட்டோம். நாம் எமது வாழ்க்கையை அடிக்கடி கவனிக்காமல் விட்டு விடுவதினால் எமக்கு வாழ்வில் செழிப்பு விளங்குவதில்லை.

நமக்குள்ளேயும் நம்மைச் சுற்றியும் செழிப்பு இருக்கிறது என்பதை நாம் இன்னும் சரியாக அறியவில்லை.

எங்கே, எப்படி நாம் செழிப்பை அடைய முடியும் என்பதை பற்றி நாம் இன்னும் ஆழமாகப் சிந்தித்து பார்க்கவில்லை.

செழுமைக்கு வழிவகுக்கும் நேர்மறையான அணுகுமுறைகளை வளர்த்துக் கொள்வதில் ஆசை ஆர்வம் நிறைந்தவர்களாக நாம் இருந்தால் எமக்குள்

செழுமையான சிந்தனை,
செழுமையான கருத்துக்கள்,
செழுமையான செயல்கள்
செழுமையான முடிவுகள்
செழுமையான மனப்பான்மை

போன்ற நற்குணங்கள் வெளிப்பட ஆரம்பிக்கும்.

அது நமது மொத்த வாழ்க்கையையும் சிறந்ததாகவும் மதிப்புமிக்கதாகவும் அர்த்தமுள்ளதாகவும் ஆக்கிவிடும்.

வாழ்க்கையில் செழிப்பு வளர எங்களை அனுமதித்து மிகச்சிறந்த மனப்பான்மையை வளர்க்க சில உதவிக் குறிப்புகளை நாம் பின்பற்ற முயற்சிப்போம்.

– முதல் முதலாக எங்களை செழிக்க வைக்க முடியும் என்று நம்புவோம்

– பணம், பொருள், பாராட்டு போன்றவற்றுக்கு முதலிடம் கொடுக்கும் எண்ணத்தில் இருந்து விடுபடுவோம்.

– பயனுள்ள அறிவு மற்றும் சிறந்த புரிதலை வளர்த்துக் கொள்வோம்

– வாழ்நாள் முழுவதும் ஏதாவதொன்றை கற்பதில் ஈடுபடுவோம்.

– நேர்மறையான, வெற்றிகரமான நபர்களுடன் நல்ல தொடர்புகளை வைப்போம்.

– தகுதியான, அடையமுடியுமான இலக்குகளை அமைத்துக் கொள்வோம்.

– இலக்கை நோக்கி பயணிப்பதில் உறுதியாக இருப்போம்.

– ஆசையோடும் மிகுந்த கவனத்துடனும் அன்றாட வேலைகளில் ஈடுபடுவோம்

– எங்களுக்கு நாம் உண்மையாக இருப்போம்.

– சிறந்த நடத்தைகள் செழிப்பான வாழ்க்கையின் அடிப்படை என்பதை அடிக்கடி நினைவில் கொள்வோம்.

– பிழையான நடத்தைகளை விட்டு விலகுவதை ஒரு பழக்கமாக ஆக்குவோம்.

– மற்றவர்கள் எங்களுடன் தொடர்பு கொள்வதை நாம் மதிப்பதாக அவர்களுக்க உணரச் செய்வோம்.

– நாம் பெற்ற எல்லாவற்றிற்கும் நன்றியுடன் இருப்போம்.

எனவே நல்ல விடயங்களை சிந்திப்பதன் மூலமும், அற்புதமான யோசனைகளை உருவாக்குவதன் மூலமும் நல்லவராக இருக்க முயற்சி செய்வோம்.

செழிப்பான வாழ்க்கை வாழ்வது என்பது தொடர்ச்சியான ஒரு பயணமாகுமாகும். தொடர்ச்சியான பயணத்தை பயனுடன் போகவேண்டுமானால் அதற்கு இடைவிடாத முயற்சி, கடின உழைப்பு, நேர்மறையான எண்ணம் தேவை.


செழிப்பு என்றால் என்ன என்பதை சரியாக வரையறுத்து, தெளிவான இலக்குகளை நிர்ணயித்து நாம் பயணிக்க வேண்டும். எங்கள் ஆரோக்கியத்தை கவனித்து வாழ்வதில் மிகவும் அவதானம் காட்ட வேண்டும்.

செழிப்பு என்பது செல்வத்தைக் குவிப்பது பற்றியதல்ல.

அது மகிழ்ச்சியுடன் வாழ்வது பற்றியது.



**அஸ்ஹர் அன்ஸார்** FRSPH (UK)
**மனோதத்துவ ஆலோசனை நிபுணர்**
**மனோதத்துவ எழுத்தாளர்**




பயாஸா பாஸில்

## ஒரு புரிதல்

அவளது அத்தனை பிடிவாதத்தையும்
ஒரு மென்மையான புன்னகையோடு எதிர்
கொள்ள உன்னால் மட்டும்
எப்படி முடிகிறதெனக்கேட்டால்......

அவளது அத்தனை பிடிவாதத்தையும்
நேசிக்கபழகியிருக்கிறேன் என்றாய்.......

உனக்கவளைப்பிடித்திருந்த போதும் உன்மீதான
அவளது வெறுப்புகளுக்கு மதிப்பளித்து
எப்படி அவளை விட்டுக்கொடுக்க உன்னால்
முடிந்ததெனத்தெரியவில்லை....

அவள் உன்னை ஜெயித்துவிட்டதாக சிலாகித்த
தருணங்களில் எல்லாம்
உன் அன்பது அங்கே ஜெயித்துக்கிடக்கிறது
பாரெனஅவளிடம்
கத்த வேண்டும்போல இருந்தது......

நீ எத்தனை கவனமாக
அவளைப்பார்த்துக்கொண்டாயென
ஓர் நாள் அவள் உணர்வாள்தான் ஆனால்
அந்த தருணத்தில் அவளுக்காக
உன்னை என்னிடம் விட்டுத்தரும்படி
நீயே என்னிடம் கேட்கக்கூடுமென்ற பயங்களை
உருவாக்கிவிடுகிறது அவள்மீதான
உனது ஆழமான புரிதல்...

– இசைவிழிசந்திரன் –



# கனவுகளை வெல்ல சிறந்தவைகள்

1. ”நம்முடைய கனவுகள் அனைத்தையும் பின்தொடர தைரியம் இருந்தால் நனவாகும்.” – வால்ட் டிஸ்னி

2. ”வெற்றி என்பது உற்சாகம் குறையாமல் தோல்வியிலிருந்து தோல்வியை நோக்கி நடப்பது.” – வின்ஸ்டன் சர்ச்சில்

3. ”வெற்றிகரமான நபராக மாற முயற்சி செய்யுங்கள், மாறாக மதிப்புமிக்க நபராக மாற முயற்சி செய்யுங்கள்.” – ஆல்பர்ட் ஐன்ஸ்டீன்

4. ”இது உயிர் வாழும் உயிரினங்களில் வலிமையானது அல்ல, மிகவும் புத்திசாலி அல்ல, ஆனால் மாற்றத்திற்கு மிகவும் பதிலளிக்கக்கூடியவை.” – சார்லஸ் டார்வின்

5. ”நான் தோல்வியடையவில்லை. வேலை செய்யாத 10,000 வழிகளை நான் கண்டுபிடித்துள்ளேன்.” – தாமஸ் எடிசன்

6. ”ஒரு வெற்றிகரமான வாழ்க்கையின் முழு ரகசியமும் ஒருவரின் விதி என்ன என்பதைக் கண்டுபிடித்து, பின்னர் அதைச் செய்வது.” – ஆஸ்கார் வைல்ட்

7. ”பெரியவர்க்குப் போக நல்லதை விட்டுக்கொடுக்க பயப்பட வேண்டாம்.” – ஜான் டி. ராக்பெல்லர்

8. ”நான் எவ்வளவு கடினமாக உழைக்கிறேனோ, அவ்வளவு அதிர்ஷ்டம் எனக்கு இருப்பதாகத் தோன்றுகிறது.” – தாமஸ் ஜெபர்சன்

# பரஸ்பரம்

அன்று அவர்கள் திருமண நாள்.

திருமணமாகிப் பதினைந்து ஆண்டுகள் ஓடி விட்டன.

ஆரம்பகாலத்தில் இருந்த பரஸ்பர அன்பு குறைந்து விட்டது

எல்லாவற்றுக்கும் விவாதம்

சின்னச்சின்ன விஷயங்களுக்குக் கூடச் சச்சரவு என வாழ்க்கை

மாறித்தான் போய் விட்டது.

ராதா காத்திருந்தாள்,கணவன் ராஜாவின் வருகைக்காக.

அவன் இன்று திருமண நாள் என்பதை நினைவில் வைத்திருப்பானா?

ராதாவுக்கு நம்பிக்கை இல்லை.

இருப்பினும் ஓர் அற்ப ஆசை,அவன் பரிசோடு வந்து ஆச்சரியப்படுத்த மாட்டானா

என்று!

வெளியில் மழை வேறு .

ராதா காத்திருந்தாள்

அழைப்பு மணி ஒலித்தது.

ராதா ஓடிச் சென்று கதவைத் திறந்தாள்......

கையில் ஒரு பரிசுப் பொட்டலத்துடன் மழையில் நனைந்த கோலத்தில்...... ராஜா!

“இனிய மண நாள் வாழ்த்துகள், அன்பே”

அவள் அவனை அணைத்த்க்கொண்டாள்.

மகிழ்ச்சி வெள்ளம்!

உள்ளே சென்றனர்.

அவன் தலையைத் துவட்டி விட்டாள்

மாற்று ஆடை கொடுத்தாள்

சூடான காபி தயாரித்துக் கொடுத்தாள்.

இருவரும் அந்தக்காலம் திரும்பி வந்தது போல் கொஞ்சியவாறு பேசத் துவங்கினர்.

அடுத்த அறையிலிருந்த் தொலைபேசி அலறத் தொடங்கியது.

சலிப்புடன் எழுந்தாள் ராதா...”சே!

சிவ பூஜையில் கரடி மாதிரி!இது வேற”

எடுத்தாள்.

ஆண்குரல்,

“ஹலோ! இது ராஜா அவர்களின் வீடா?”

“ஆமாம்.”, “நாங்கள் டி–1 காவல் நிலையத்தில் இருந்து பேசுகிறோம்.

ஒரு சாலை விபத்தில் ராஜா இறந்து விட்டார்.

அவர் பர்சில் இருந்த விசிடிங் கார்டிலிருந்து எண்ணைத் தெரிந்து கொண்டோம்.

வருந்துகிறோம் அம்மா.”

ராதாவுக்கு மயக்கம் வருவது போல் இருந்த்து!

இது எப்படி? அடுத்த அறையில் கணவன் இருக்கிறானே!

ஒரு வேளை........

தன்னைப் பார்க்க வரும்போது இறந்த கணவனின் ஆவி அவளைத் தேடி வந்து

விட்டதோ?

மேலுலகம் செல்லுமுன் அன்புக்குரியவரைக் காண ஆவி வரும் என்று

கேள்விப்பட்டி ருக்கிறாள்

அடுத்த அறைக்கு ஓடினாள்

அங்கு.....

அவன் இல்லை!

உண்மைதான்

அவன் போய் விட்டான்.

பழைய வாழ்க்கையை மீண்டும் தொடங்கியிருக்கலாமே!

என்ன செய்வேன்.?

நான் செய்த தவறுகளைத் திருத்திக் கொள்ள வாய்ப்பின்றி போனதே ”

அழத் தொடங்கினாள்

அப்போது...........

கழிப்பறைக்கதவு திறந்தது.....

ராஜா வெயே வந்தான்

”ராதா! சொல்ல மறந்துட்டேன்.

இன்னிக்கு என் பர்ஸ் தொலைந்து போய் விட்டது.

நல்ல வேளை ஏடிஎம் அட்டையெல்லாம் என் கைப்பயில் வைத்திருந்தேன்!”

--------------------------------

சண்டையிட்டு பேசாதிருக்கும் கணவன் மனைவிகள் தன் ஈகோ வை விட்டுவிட்டு உடனே பேசி... வாழ்க்கையை சந்தோஷமாக வாழ ஆரம்பியுங்கள்.

அடுத்த நிமிடம் என்ன நடக்கும் என்று தெரியாது.

பிரிந்து நொந்து தனக்குதானே புலம்பி மனகசப்புடன் தனிமையில் சாவதற்கல்ல இந்த வாழ்க்கை⁶

வாழ்க்கை வாழ்வதற்கே...!


அரபாத் பஹர்தீன்

# 20 வயதிற்குட்பட்ட ஆண்களுக்கான கரப்பந்து சம்பியன்ஷிப் நேற்று ஆரம்பம்

கரப்பந்து சம்பியன்ஷிப் தொடர் நேற்று 6ஆம் திகதி முதல் 12ஆம் திகதி வரை இலங்கையில் உள்ள சுகததாச உள்ளக விளையாட்டு அரங்கில் நடைபெற உள்ளது.

மத்திய ஆசிய கரப்பந்தாட்ட சம்மேளனமும், இலங்கை




20 வயதுக்குட்பட்ட ஆண்களுக்கான மத்திய ஆசிய

கரப்பந்தாட்ட சம்மேளனமும் இணைந்து ஏற்பாடு செய்துள்ள

இப்போட்டித் தொடரில் வரவேற்பு நாடான இலங்கை, கிர்கிஸ்தான், துர்க்மெனிஸ்தான், உஸ்பெகிஸ்தான், நேபாளம் மற்றும் மாலைதீவுகள் ஆகிய 6 நாடுகள் பங்குபற்றவுள்ளன.

இந்த நிலையில் முதல் சுற்றின் கீழ் ஒரே நாளில் 3 போட்டிகள் நடைபெறும், அந்தப் போட்டிகள் எதிர்வரும் 10ஆம் திகதி முடிவடையும்.

பின்னர் 11ஆம் திகதி 2 அரையிறுதிப் போட்டிகள் மற்றும் 5ஆவது இடத்திற்கான போட்டியும் இடம்பெறும். கடைசி நாளான 12ஆம் திகதி 3ஆவது இடத்திற்கான போட்டி மற்றும் இறுதிப்போட்டி நடைபெறவுள்ளது.

இந்தப் போட்டித் தொடரில் சம்பியனாகும் அணியும், 2ஆவது இடத்தைப் பிடிக்கின்ற அணியும் 2025ஆம் ஆண்டு நடைபெறவுள்ள 20 வயதுக்குட்பட்டோருக்கான ஆசியக் கிண்ண கரப்பந்து சம்பியன்ஷிப்பில் பங்கேற்க தகுதி பெறும் என்பது குறிப்பிடத்தக்கது.




# இலங்கைக்கு எதிரான ரி20 மற்றும் ஒருநாள் தொடருக்கான மே.இ.தீவுகள் குழாம் அறிவிப்பு

இலங்கை அணிக்கு எதிராக இடம்பெறள்ள ஒருநாள் மற்றும் ரி20 தொடருக்கான மேற்கிந்தியத் தீவுகள் அணி வீரர்கள் குழாம் அந்நாட்டு கிரிக்கெட் சபையால் நேற்று முன்தினம் அறிவிக்கப்பட்டுள்ளது.

இவ்விரு அணிகளுக்கும் இடையிலான தொடரில் முதலில் 3 போட்டிகள் கொண்ட ரி20 தொடர்எதிர்வரும் 13ஆம் திகதி தொடங்கி எதிர்வரும் 17ஆம் திகதி வரை தம்புள்ள ரங்கிரி சர்வதேச மைதானத்தில் இடம்பெறள்ளது.

பின்னர் 3 போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடர் எதிர்வரும் 20ஆம் திகதி ஆரம்பமாகி எதிர்வரும் 26ஆம் திகதி வரை கண்டி பல்லேகலே சர்வதேச மைதானத்தில் பகலிரவுப் போட்டியாக இடம்பெறவுள்ளது.

அதற்கமைய இவ்விரு தொடர்களுக்கான மேற்கிந்தியத் தீவுகள் அணி வீரர்கள் குழாம் நேற்று முன்தினம் அறிவவிக்கப்பட்டிருந்தது. அதனடிப்படையில் அந்த அணியின் முன்னணி வீரர்களான நிக்கோலஸ் பூரன், ஆண்ட்ரே ரஸல், அகீல் ஹொசைன் மற்றும் ஷிம்ரன் ஹெட்மையர் ஆகியோர் தனிப்பட்ட காரணங்களால் இத்தொடரில் இருந்து விலகியுள்ளனர். மேலும் அறிவிக்கப்பட்டுள்ள ரி20 அணியின் தலைவராக ரோவ்மன் பாவெலும், துணைத் தலைவராக ரோஸ்டன் சேஸ/ம் நியமிக்கப்பட்டுள்ளனர்.

மேலும் ஒருநாள் அணியின் தலைவராக ஷாய் ஹோப்பும், துணைத் தலைவராக அல்சாரி ஜோசப்பும் நியமிக்கப்பட்டுள்ளனர். அத்துடன் ரி20 மற்றும் ஒருநாள் அணிகளில் பெரும்பாலும் இளம் வீரர்களுக்கு முழுமையான வவாய்ப்பு வழங்கப்பட்டுள்ளமை இங்கு சுட்டிக்காட்டத்தக்கது.

அத்துடன் இவ்விரு தொடர்களுக்கான இலங்ரக அணி விபரம் இன்னும் அறிவிக்கப்படில்லை. இறுதியாக இலங்கை அணி விளையாடிய இந்தியாவுக்கு எதிரான ரி20 தொடரை இழந்தாலும், ஒருநாள் தொடரை கைப்பற்றி வரலாற்று சாதனை படைத்தது. எனவேஇ அந்த உத்வேகத்துடன் அந்த அணி மேற்கிந்தியத் தீவுகள் அணியை எதிர்கொள்கிறது. அதேசமயம் மேற்கிந்தியத் தீவுகள் அணியும் தென்னாப்பிரிக்காவுடனான தொடரை வென்ற கையோடு இத்தொடரை எதிர்கொள்வதால் ரசிகர்களின் எதிபார்ப்புகளும் அதிகரித்துள்ளன.

**மேற்கிந்தியத் தீவுகள் ரி20 அணி:**

ரோவ்மேன் பவல் (தலைவர்), ரோஸ்டன் சேஸ், ஃபேபியன் ஆலன், அலிக் அதானாஸ், ஆண்ட்ரே பிளெட்சர், டெரன்ஸ் ஹிண்ட்ஸ், அல்சாரி ஜோசப், ஷாய் ஹோபப, ஷமர் ஜோசப், பிராண்டன் கிங், எவின் லூயிஸ், குடாகேஷ் மோட்டி, ஷெர்பேன் ரூதர்ஃபோர்ட், ரொமாரியோ ஷெப்பர்ட், ஷமர் ஸ்பிரிங்கர்.

**மேற்கிந்தியத் தீவுகள் ஒருநாள் அணி:**

ஷாய் ஹோப் (தலைவர்), அல்சாரி ஜோசப், ஜுவல் ஆண்ட்ரூ, அலிக் அதானாஸ், கீசி கார்டி, ரோஸ்டன் சேஸ், மேத்யூ ஃபோர்டே, ஷமர் ஜோசப், பிராண்டன் கிங், எவின் லூயிஸ், குடகேஷ் மோட்டி, ஷெர்பேன் ரூதர்ஃ போர்ட், ஜேடன் சீல்ஸ், ரொமாரியோ ஷெப்பர்ட், ஹேடன் வால்ஷ் ஜுனியர்.

# ஷங்காய் மாஸ்டர்ஸ் டென்னிஸ் தொடர் காலிறுதியில் ஜெக்கோவிச்



ஷங்காய் மாஸ்டர்ஸ் டென்னிஸ் தொடரில் நேற்று (6) இடம்பெற்ற 2ஆம் சுற்று ஆட்டத்தில் முன்னாள் முதல் நிலை வீரரான சேர்பியாவின் நவோக் ஜெக்கோவிச் அமெரிக்காவின் அலெக்ஸ் மைக்கல்சனை 7:6, 7:6 என்ற நேர் செட்களில் வீழ்த்தி காலிறுதிக்குத் தகுதி பெற்றார்.

உலகின் புகழ்பெற்ற டென்னிஸ் தொடர்களில் ஒன்றான ஷங்காய் மாஸ்டர்ஸ் டென்னிஸ் தொடர் கடந்த 30 ஆம் திகதி ஆரம்பித்திருந்தது. இதன் இறுதி ஆட்டங்கள் எதிர்வரும் 13ஆம் திகதி வரை இடம்பெறவுள்ளன. இத் தொடரின் ஆடவர் ஒற்றையர் மற்றும் இரட்டையர், மகளிர் ஒற்றையர் மற்றும் இரட்டையர் ஆகிய 4 பிரிவுகளாக இடம்பெற்றுருகின்றது.

அந்தகையில் நேற்று இடம்பெற்ற 2ஆம் சுற்று ஆட்டம் ஒன்றில் முன்னாள் முதல்நிலை வீரரான சேர்பியாவின் நவோக் ஜெக்கோவவிச், அமெரிக்கரின் இளம் வீரரான அலெக்ஸ் மைக்கல்சனை எதிர்த்து விளையாடினார். இப்போட்டியின் முதல் செட்டில் இருவரும் மாறி மாறி புள்ளிகளைப் பெற போட்டி விறுவிறுப்பை ஏற்படுத்தியது. இருப்பினும் அனுபவமிக்க ஆட்டத்தை வெளிப்படுத்திய ஜெக்கோவிச் 7:6 என முதல் செட்டை தனதாக்கி முன்னிலை பெற்றார்.

பின்னர் ஆரம்பித்த தீர்மானமிக்க 2ஆது செட்டிலும் இரு வீரர்களும் விட்டுக் கொடுப்பின்றி ஆட போட்டி உச்சகட்ட விறுவிறுப்பைத் தொட்டது.

இருந்த போதிலும் ஜெக்கோவிச் இந்த செட்டையும் 7:6 என கைப்பற்றிக் கொள்ள 7:6, 7:6 என்ற நேர் செட்களில் வெற்றி பெற்ற ஜெக்கோவிச் தொடரின் காலிறுதிப் போட்டிக்குள் தடம் பதித்து அசத்தினார்.

# 9ஆவது மகளிர் ரி20 உலகக்கிண்ணம் ஆஸியிடமும் தோற்றுப் போனது இலங்கை அணி

ஐசிசி மகளிர் ரி20 உலகக்கிண்ணத்தில் முதல் லீக் சுற்றில் தங்களுடைய இரண்டாவது போட்டியில் நடப்புச் சம்பியனான அவுஸ்திரேலிய அணிக்கு எதிராக 6 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் இலங்கை மகளிர் அணி தோல்வியடைந்ததுடன் தொடராக இரண்டாவது தோல்வியாகவும் இது பதிவானது.

9ஆவது மகளிர் ரி20 உலகக்கிண்ணத் தொடர் ஐக்கிய அரபு இராச்சியத்தில் இடம்பெற்றுவரும் நிலையில் இலங்கை அணி குழு ஏ இல் இடம்பிடித்து முதல் சுற்றான லீக் போட்டிகளில் பங்கேற்று வருகின்றது. அதற்கமைய கடந்த 3ஆம் திகதி இடம்பெற்ற பாகிஸ்தான் அணிக்கு எதிரான முதல் போட்டியில் தோல்வியடைந்த இலங்கை மகளிர் அணி, அவுஸ்திரேலிய அணிக்கு



எதிரான 2ஆசது லீக் போட்டியில் நாணய சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் துடுப்பெடுத்தாடியது.

அதற்கமைய நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்களில் 7 விக்கெட்டுகளை இழந்து 93 ஓட்டங்களை மாத்திரமே இலங்கை மகளிர் அணி பெற்றுக்கொண்டது. துடுப்பாட்டத்தில் ஹர்சிதா சமரவிக்ரம 23 ஓட்டங்களையும், நிலக்ஷி டி சில்வா 29 ஓட்டங்களையும் அதிகபட்சமாகப் பெற்றனர். பந்துவீச்சில் மேகன் ஸ்கௌட் 3 விக்கெட்டுகளை வீழ்த்தினார்.

பின்னர் மிக இலகுவான 94 ஓட்டங்கள் என்ற வெற்றி இலக்கினை நோக்கி பதிலுக்கு களம் நுழைந்த அவுஸ்திரேலிய அணி 14.2 ஓவர்கள் நிறைவில் 4 விக்கெட்டுகளை மாத்திரம் இழந்து 94 ஓட்டங்களைப் பெற்ற அவுஸ்திரேலிய மகளிர் அணி இலகு வெற்றியை பெற்றுக்கொண்டது. துடுப்பாட்டத்தில் பெத் மூனி 43 ஓட்டங்களை பெற்றுக் கொடுத்தார்.

மேலும் முதல் இரண்டு போட்டிகளிலும் தோல்வியடைந்த இலங்கை மகளிர் அணி மூன்றாவது போட்டியில் எதிர்வரும் 09ம் திகதி இந்திய அணியை எதிர்கொள்ளவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இப் பத்திரிகையானது (மின்னிதழ்) Moon Media Network நிறுவனத்தினால் 41/2, விஜித வீதி, நதிமால, தெஹிவளை எனும் முகவரியில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.